# பொருளடக்கம்


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1, | பாட்டி வைத்தியம் பணம் செலவாகாது — ஆசிரியர் | 365 |
| 2. | இச் சங்கத்தைப் பற்றிய நன்மதிப்புரை | 368 |
| 3. | சுகாதார உணவு II. — நல்லுணவாளன் | 369 |
| 4. | நமது நரம்புகளின் உற்பத்தி வரலாறு 4. — வைத்தியர் ஆ. கனகரத்தினம் | 372 |
| 5. | மேகசுரம் — வைத்தியர் V. K. முருகேசபிள்ளை | 375 |
| 6 | இரத்தாசயம் — வைத்தியர் ஐ. கந்தையா | 377 |
| 7. | கைகண்ட கைமுறைகள் — வைத்தியர் க. வே. | 378 |
| 8. | ஒரு கிறீம் செய்யும் முறை | 379 |
| 9. | காய்ச்சலின் வரலாறும் மருந்தும் II — வைத்தியர் நா. பொ. | 380 |
| 10 | வைத்திய வினாவிடை — வைத்தியர் கா. ச. | 381 |
| 11 | மகோதரமும் அதன் சிகிச்சையும் — வைத்தியர் அ. வி. இராசரத்தினம் | 382 |
| 12 | தோண்டைக் கிரந்தி, நாசிக்கிரந்திகளின் வீக்கமும் மருந்தும் I. | 385 |
| 13 | கேற்பனி இருமலுக்கு உறட்டி — வைத்தியர் வே. சி. | 387 |
| 14. | புற்றுரோக சிகிச்சை — வைத்தியர் வி. கனகசபை | 388 |
| 15. | வைத்தியச் செய்திகள் | |


## "வைத்தியன்"


*கௌரவ ஆசிரியர்:*

வைத்தியர் **K. S.** பரிபூரணநந்தர் அவர்கள்

*கௌரவ உறுப்பாளர்கள்:*

வைத்தியர் **A.** கனகரத்தினம் அவர்கள் (கொழும்பு)

,, **M. S.** சுந்தரம் ,,

,, **V.** கனகசபை ,,

,, **A. S.** இராசையா ,,

*கௌரவ செயலாளர்:*

,, **S. A.** இராசையா அவர்கள்

## சிரநேத்திராஞ்சனத் தைலம்

தினந்தோறும் இதில் 20 சொட்டுத் தலையிற் தேய்த்து, வாரம் இருமுறை வெந்நீரில் ஸ்நானஞ் செய்தால் கண், மூக்கு சம்பந்தமான சகல வியாதிகளும், பித்தமயக்கம், தலைவலி, கபால இடி முதலியனவும், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி ஆகிய ரோகங்களும் தீர்ந்து முகவசீகரமும் ஞாபகசக்தியும் உண்டாகும்.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25.

4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50.

**மு. க. ஜெகநாதன்,** கண் வைத்தியர்

பெரியகடை : : யாழ்ப்பாணம்.



### தற்கால நவீன

# நகைகளுக்கு

## சிறந்த இடம்: "யப்பான்"

ஆரம்பம்: 1900.

ஆடர் நகைகள் குறித்த நேரத்தில் அழகாகச் செய்து கொடுக்கப்படும்.

**க. ஆறுமுகம்பிள்ளை & சன்,**

— நகை வியாபாரம் —

64, கன்னதிட்டி : : யாழ்ப்பாணம்.

தந்தி: "யப்பான்" க. ஆ. கனகசபை

போன்: 117 சொந்தக்காரர்.

"நரம்பெனு நாடி யவற்றினுக் கெல்லா
முரம்பெறு நாடியொன் றுண்டு"

# வைத்தியன்

— திங்கள் வெளியீடு —

| மலர் 1 | விகிர்தி ஆண்டு புரட்டாதித் திங்கள் | இதழ் 12 |
|---|---|---|

## பாட்டி வைத்தியம் :: :: :: :: பணம் செலவாகாது

ஆசிரியர்

பரராசசேகரன் ஆண்ட காலத்தில் இருந்த வைத்தியர்கள் பாக்கியசாலிகள். அக்காலத்திலிருந்த வைத்தியர்கள் பெரும் புலவர்களாயும் இருந்தனர். அப் புலமை வைத்தியர்கள் பாடிவைத்த வைத்தியப் பாக்களை நாம் இன்று பரிபாஷை தெரிந்து பொருள்கண்டு அவர்கள் அனுபவத்தில் கண்டுவிட்டு வைத்துப்போன மருந்து முறைகளையே அணுப்பிசகாது கையாண்டு வருகின்றோம். இன்று நாமாக நாலு சரக்குகளைச் சேர்த்துப் புதிய மருந்துமுறைகளைக் கண்டுபிடித்தோமில்லை.

இன்று காலப்போக்கு முற்றாய் மாறிக்கொண்டது. நோயாளிக்கு உடம்பில் என்ன குறைவு காணப்படுகிறதென்று ஆராய்ந்துபார்ப்பதில் பெரும் விஞ்ஞானிகள் கருத்துக்கொண்டுள்ளனர். நாம் வாத பித்த கப தோஷங்களைக் கைநாடி மூலம் கண்டறிந்து தேகத்தின் குறைபாடுகளைக் கூறுவோம். ஆனல், விஞ்ஞானமுறையில் பல யந்திரசாதனங்களையும் நுட்பமான சோதனைக் கருவிகளையும் மேலைநாடுகளில் கண்டும் உபயோகித்தும் வருகிறார்கள். சூத்திரமுறைக் கருவிப் பரிசோதனைகளில் மோகங்கொண்ட நம் நாட்டவர்களிற் சிலர் அம்முறைகளை ஆதரிக்கின்றனர்.

---

பொழிப்புரை:- மேல் உரைத்த நாடிகள் எழுபத்தீராயிரத்துக்கு எல்லாம் முதன்மையானது என்று சொல்லத்தக்க வலிமை பெற்ற தனித்த ஒருநாடி உளது. (இது சுழுமுனை என்னும் நாடியின் சிறப்பு உரைத்தது)

நம் முறையில் பித்தம் அதிகரித்தால் அதனுல் சோகை, பாண்டு, காமாலை, செங்கண்மாரி, மங்கமாரி முதலிய நோய்கள் வரக்கூடுமெனத் திட்டமிட்டுக் கூறி விடுவோம். இதுபோல் வாதநாடி, சிலேற்பனநாடி பார்த்து மற்றும் வியாதிகள் கூறப்படுகின்றன. மேலை நாட்டு வைத்திய டாக்டர்களுக்கும் கைநாடி பார்த்துத் தேகநிலையறிந்து மருந்து கொடுக்க விருப்பமாயினும் அம்முறையை அவர்கள் கற்ருர்களில்லை, ஆனுல் அவர்களும் கையைப் பிடித்து நாடித் துடிப்பை மட்டும் பார்க்கிருர்கள். இதனுல் கைநாடியில் கருத்திருப்பதை அவர்களும் நம்புகின்றனர். மேலைநாட்டு வைத்திய முறையில் பரிசோதனை செய்யும்போது டாக்டர் 'கல்சியம்' என்ற சுண்ணச்சத்துக் குறைவு, வைட்டமின் 'பி' உமக்குத் தேவைப்படுகிறது, வெளுத்துப்போனீர் என்றெல்லாம் கூறுவர். வைட்டமின்'பி' தேவைப்படுமானுல் நம்நாட்டு வைத்தியர்கள் நோயாளிக்குத் தவிடுள்ள ஊர்அரிசியை உபயோகிக்கும் சில கைபாகங்களைக் கூறுவர். ஆங்கில முறையில் வைட்டமின் 'பி' கொம்ப்ளெக்ஸ், 'பீமாக்ஸ்' முதலிய ஆங்கில டப்பா மருந்துகளில் சில எழுதிக் கொடுத்து மேலைநாட்டவருக்கு வியாபாரந் தேடிக்கொடுப்பர். மஞ்சட்காமாலை ரோகத்தை யாவருக்கும் தெரியும். இந்தநோய் வந்தால் கிராமங்களில் சாதாரணமாய் வைத்தியர்களிடம் போவதற்கு வீட்டுப் பாட்டிமார் விடமாட்டார்கள். பாட்டிமாருக்குப் பல அனுபவ மருந்துகள் கால்துட்டுச் செலவில்லாத முறையில் தெரியும். உடனே கீழ்க்காய் நெல்லி, செவ்விளனீர் இவற்றைக் கொண்டு மூன்று நாட்களில் குணமாக்கி, வெய்யிலில் அலைந்து, நித்திரை விழித்துக்கொள்ளாதபடி நல்ல கிரமமான எண்ணெய் முழுக்காட்டி வைப்பாள் பாட்டி. பாட்டியின் எண்ணெய் முழுக்கு அலாதியானது. கண், மூக்கு, காது, தொப்புள் முதலிய அவயவங்கட்கெல்லாம் எண்ணெயிட்டு, வாயிலும் சிறிதுநேரம் எண்ணெய்வைத்துக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துவாள் பாட்டி. அதனுல் கண்வியாதி, பல்வியாதி, பீனசம், உண்ணுக்கு, காதுக்குத்து, தொண்டைப்புற்று, வயிற்றுக்குத்து இவைகள் அந்தக்காலத்தில் அருமையிலும் அருமை.

பனிக்கட்டிகள் உறையும் பூமிக்கெனத் தயாரித்த நெருப்பு மருந்துகளை உஷ்ணபூமியாகிய நம்நாட்டிலும் செலுத்துவதற்கு இடந்தந்துவரும் முட்டுப்பட்ட இலங்கை அரசாங்கம், அதிக பணச்செலவு இல்லாத ஆயுள்

வேத மருந்துகளைத் தக்க நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து உண்மையான மருந்துகளைப் பகிரங்கப் படுத்தி ஏழைமக்கள் பெறும்படி ஏன் செய்யக்கூடாது? நம் மருந்துகளில் உண்மையில்லையென்று ஆராய்ச்சி செய்து கண்டால் ஏன் ஆயுர்வேத வைத்தியத்தை மூடி விடக்கூடாது? இதைக் குற்றுயிரில் இன்னும் விட்டு வைத்துக் கொண்டிருப்பது அரசாங்கத்தின் நிருவாகத் திறமையீனத்தை மக்கள் கண்டு நகையாடுவதற்கு இட மளிப்பதாகு மல்லவா?

கொழும்பு கொட்டாரேட்டில் அரசாங்கம் நடத்தும் ஆயுள்வேதக் கல்லூரி ஆஸ்பத்திரியில் வெளிவைத்தியம் செய்துகொள்வதற்குக் 'கியூ' வரிசையில் தினசரி 1400க்கு மேலான ஏழை நோயாளிகள் காத்துநிற்பதை எப்பொழுதாவது சுகாதார மந்திரிக்கு நேரில் காட்டப் பட்டதா? இலங்கையில் அபரிமிதமான பணத்தைக் கொட்டி நடத்திவரும் எந்த ஆங்கிலமுறை ஆஸ்பத்திரியிலும் இவ்வளவுதொகையான நோயாளர் மருந்துக்குக் காத்துநிற்கவில்லை. இலங்கையிலுள்ள எந்தப் பெரிய ஆஸ்பத்திரியிலும் இதனிலும் கால்வாசி நோயாளரே காணப்படலாம். உணவுக்கே பஞ்சப்படும் அரசாங்கம் மேலைநாட்டு மருந்துக்கு இவ்வளவு பணம் செலவு செய்வது தகுதியாகுமா? இலங்கை சுதந்திரம் பெற்றுவிட்ட பின்னும் நமக்குத் தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள் அத்தனையையும் அயல்நாடு தருமெனக் காத்துக் கிடக்கிறோம். உணவு, உடை, மருந்து இம்மூன்றும் நம்மிடமில்லை. இவை நம் நாட்டில் உற்பத்தியாகிற போதுதான் இலங்கை சுதந்திரம் பெற்றுவிட்டதை மக்கள் நம்பமுடியும்.

---

## இந்தியாவில் நிமிஷத்துக்கு ஒரு க்ஷயரோகி மரணம்

"உலகத்தில் க்ஷயரோகத்தினல் ஒவ்வொரு ஆறு விஞடிகளுக்கும் ஒரு நபர் வீதம் உயிரிழக்கின்றனர். இந்தியாவிலோ நிமிஷத்துக்கு ஒருவர் பலியாகின்றனர்" எனச் சர்வதேச தடுப்பு இயக்க டைரக்டர் டாக்டர் ப்ளமிங் ஹுண்ட் இன்று இங்கு பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் தெரிவித்தார்.

இந்தியாவில் கிட்டத்தட்ட 25 லக்ஷத்திலிருந்து 30 லக்ஷம் மக்கள் க்ஷயரோகத்தினல் அவதிப்படுகின்றனர் என்றும், அவர்களில் வருடத்துக்கு 5 லட்சம் பேர் செத்துவிடுகின்றனரென்றும் அவர் கூறினர்.

— சுதேசமித்திரன்

# இச்சங்கத்தைப் பற்றிய நன்மதிப்புரை

★

அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத்தினுல் நடாத்தப்பெற்ற வைத்திய மகாநாட்டில் நானும் பங்குபற்றியது எனக்கு வெகு மகிழ்ச்சியைத் தருகிறது. இம்மகாநாடு மிகவெற்றி கரமாக நடந்தேறியது. இச்சங்கத்தையும், இதன் காரியகர்த்தாக் களையும் அவர்கள் ஆற்றிவரும் திறமைவாய்ந்த முயற்சிகளுக்காக வாழ்த்துகிறேன். இந்த வைத்திய சங்கம் மிகவும் உபயோகமான தொன்ருக விளங்குகிறது. சித்தஆயுள்வேத வைத்தியர்களின் நல ஊைப் பாதுகாப்பது இலங்கைத்தீவில் இந்தச் சங்கம் ஒன்றேதான். இதுவரை இச்சங்கம் சாதித்த அரிய தொண்டுகள் புனருத்தாரண மானவை. இதுபோன்ற மகாநாடுகள் வைத்திய உலகிற்குப் பெரி தும் முன்னேற்றத்தைத் தருவன. சகல வெற்றிகளும் இச்சங்கத் திற்கு உண்டாகுமாறு பெரிதும் விரும்புகிறேன்.

(ஒப்பம்) ஆர். எஸ். எஸ். குணவர்த்தனு,

24-7-49

சுதேச வைத்திய பரிபாலன சபைத் தலைவர்

கொழும்பு.

"It has given me great pleasure to participate in the deliberations of the All Ceylon Siddha Ayurvedic Conference inaugurated by the A. C. S. A. Association. The conference proved to be a grcat suscess. I congratulate the Association & its office bearers for the splendid work that has been done. The Association serves a very useful purpose. It is the only Association in the Island which can claim to Tepresent the Siddha - Ayurvedic Practitioners. The work that has hitherto been done is of a constructive nature. Conferences snch as the one held today should prove extremely useful. I wish the Association all success".

*(Sgd.)* R. S. S. Gunawardaue,

24-7-49

*President,*

Board of Indigenous Medicine.

---

# சுகாதார உணவு II

— நல்லுணவாளன் —

★

[8-ம் இதழ் தொடங்கி ஷ புனைபெயருடன் எழுதும் மேனாட்டு வைத்தியப் பெரியாரின் 3-வது கட்டுரையாகும் இது. முன் கட்டுரை (9-ம் இதழ். 272-ம் பக்கம், 29-ம் வரி)யில் காணும் 'சர்க்கரை' என்ற பிழையை நேயர்கள் 'சக்கரைன்' (saccharine) எனத் திருத்தி வாசிப்பார்களாக.]

முன்பு கூறியபடி நாம் உட்கொண்ட அரிசி, கிழங்கு முதலிய மாச்சத்துகள் குடலில் சமிக்கப்பட்டுச் சீனிச்சத்தாக மாறி இரத்தத்தில் சேருகின்றன. ஆனால், இத்தொழில் 9 மாதத்துக்குட்பட்ட சிசுக்களின் குடலிலே நடைபெறுவதில்லை. ஏனெனில், மாச்சத்துகளைச் சீனியாக மாற்றும் 'குடற்காடி' 9-வது மாதத்திற்குப் பின்பே குழந்தைகளின் குடலில் உண்டாகின்றது. இதன் காரணமாக சிறு சிசுக்களுக்கு அரிசி முதலிய மாப்பண்டங்கள் உணவாக உதவமாட்டா. அப்படியிருந்தும், உணவுப் பிசகினாலோ மற்றுங் காரணங்களினாலோ குழந்தைகளுக்கு வயிற்றோட்டமோ குடலில் அவியலோ உண்டாகும்போது, வைத்தியர் பால், டின் பால் முதலிய உணவுகளை நிறுத்தி அரிசிப்பொரி, நெற்பொரி, பாளியரிசி ஆகிய இவைகளை அடுப்பில் அவிக்காதபடி தேநீர் செய்வதுபோல் கொதிநீர் ஊற்றி ஊறவிட்டு வடித்துக் கொடுக்கச் சொல்லுவது வழக்கம். கஞ்சியாக அவியவிடாதபடி இப்படி ஊற்றியூறிய நீரில் மாச்சத்து அதிகம் இருக்கமாட்டாது; ஆனால் சில உப்பு வகைகளும் 'உயிரூட்டி'யாகிய ராஜசத்து (vitamins) களுமே சேரும். இவை குடலிலுள்ள அவியலை மாற்ற உதவிபுரிவதோடு அஜீரணப் பொருளையும், சலத்தையும் வெளியே அகற்றித் தாமும் இலகுவாகச் சமித்து உட்சேர்க்கப்படுகின்றன.

## 2. கொழுப்புச் சத்து.

இச்சத்து உடம்பின் உள் அவயவங்களைக் கவசித்துப் பாதுகாக்கின்றது. தோலுக்குக் கீழிருந்துகொண்டு பள்ளங்களை நிரவுவதால் திரண்டுருண்ட வெளி அவயவங்களுக்கு லக்ஷணத்தைக் கொடுக்கின்றது. மாச்சத்துக் கனமாக உண்பதால் கொழுப்பு உண்டாகி வயிறு (omentum) முதலிய இடங்களில் அது சேமிக்கப்படுவதுபோல், இதுவும் அதிகமாக உண்பதால் சேமிக்கப்பட்டு, உபவாசத்தின்போதும், நோய் துன்பம் பட்டினி முதலிய உணவில்லா வேளைகளிலும் இதுவே முதன்முதலாகப் பிரிக்கப்பட்டு, முக்கியமாக உடம்புக்கு வேண்டிய சூட்டையும், அது தொழிற்படுவதற்கு வேண்டிய சக்தியையும் தருகிறது. இது உடம்பின் உட்

சூடு வெளியேகாமலும், வெளிச்சூடும் குளிரும் உட்சென்று தாக்காமலும் உடம்பைக் காக்கின்றது. இதன் மகிமையாலன்றோ கடுங் குளிர் மிகுந்த வட தென் துருவப் பிரதேசங்களிலும், மத்திய வலயத்தை அண்டிய உஷ்ணதேசங்களிலும் மனிதனின் தேகச்சூடு மாறாமல் ஒரேஅளவில் ($98\frac{1}{2}$ பாகையில்) இருக்கிறது. இருந்தாலும் இவ் விசேஷசத்து, குளிர் தேசங்களில் உள்ளவர்களுக்கே அவசியமாகத் தேவை.

சாதாரணமாக ஒரு மனிதனுக்குக் கொழுப்புச்சத்து ஒரு நாளைக்கு இரண்டு அவுன்சுக்குக் குறையாமல் தேவைப்படுகிறது. இதை நாங்கள் வழக்கச் சாப்பாட்டில் எருமை, பசு முதலிய பிராணிகளின் நெய்யாகவும், தேங்காய், எள்ளு, கடலை, சோயாபீன் முதலிய தாவரநெய்யாகவும் உட்கொள்ளுகிறோம். இவைகளில் குணத்தால் விசேஷமானவை முறையே மீன்நெய்யும், பசுநெய்யும், சோயாக்கடலை நெய்யும், மற்றும் இறைச்சிவகைகளிலுள்ள நெய்களுமேயாம். இவற்றிலே ராஜசத்து (vitamin) கள் Aயும், D யும், நல்ல சில உப்புவகைகளும் ஏராளமாக உண்டு. **தேங்காய் நெய்யில் இச்சத்துகள் மிகவும் குறைவு.** ஆனபடியால் பசுநெய், வெண்ணெய், மீன்நெய் முதலிய கொழுப்புச் சத்துகளை ஏராளமாக 2 அவுன்சுக்குக் குறையாதபடி தினமும் உட்கொள்ள வேண்டும். குளிர்ந்த ஊர்களில் உள்ளவர்கள் இன்னும் விசேஷ அளவில் உண்ணவேண்டும். அரிசிச்சாதம் முதலிய மாச்சத்துகளை பிரதானமாகவும், கொழுப்புச்சத்துகள் மிகக் குறைவாகவும் உண்ணும் தென்னிந்தியர் இலங்கையர்களில், மாச்சத்தே குடல் ரஸங்களின் விசேஷ கிருத்தியத்தால் கொழுப்புச் சத்தாக மாற்றப்பட்டு உடலையும், அதன் உள்அவயவங்களையும் பாதுகாக்கிறது. என்னவிதமான நெய், எண்ணெய், கொழுப்பு வகைகளை உண்டாலும். அவை சிறுகுடலிலுள்ள இரஸங்களாலும், பித்தநீரினுதவியாலும் கொழுப்பமிலங்கள் (fatty acids) ஆகப் பிரிக்கப்பட்டே இரத்தத்தில் உட்செல்கின்றன. ஆனபடியால், பித்தநீர் முதலிய வற்றை உண்டாக்கும் உட்கருவிகள் எப்பொழுது பழுதுபடுகின்றனவோ அப்பொழுது தொடக்கம் அவை சரிவரும் வரையும் எண்ணெய் முதலிய கொழுப்புச் சத்துகள் உட்கொள்வதை அறவே தவிர்க்கவேண்டும். அவ்வித நோய்களாவன:— ஈரல் சம்பந்தமான அவியல் (hepatitis), ஈரல் கட்டு (படுவன்), காமாலை (செங்கண்மாரி) முதலியனவும்; குடல் சம்பந்தமான அவியல், அக்கரம், அவியற்சுரம். அக்கரசுரம், நெருப்பு (typhoid)க் காய்ச்சல் முதலியவைகளுமாம்.

சிலர், நெய் எண்ணெய் முதலிய கொழுப்புச்சத்துகள் மிதமாகவோ, மிகக்குறைவாகவோ சாப்பிட்டுவந்தபோதிலும் அவர்

கள் உடம்பில் கொழுப்பு ஏராளமாக உண்டாகித் தோற்றத்துக்கு அவலக்ஷணத்தையும், இயக்கத்துக்குச் சுறுசுறுப்பின்மையையும் (சோம்பலையும்) கொடுத்து அவர்களின் சுகத்தைப் பாதிக்கிறது. இக் குறிகுணங்களை ஆராயப்புகின், கொழுப்பு வகைகள் உண்ணு விட்டாலும்; ஏராளமாக மாப்பண்டங்கள் புசித்ததாலும் குழாய் (ஸ்ரோதஸ்) அற்ற கோளங்களின் உட்சுரப்புச் சத்துகள் (internal secretions of ductless glands) குறைவானதாலும் இப்படி தேகஊதல் சம்பவித்தது என்பதைக் கண்டுபிடிக்கலாகும். இதற்கு வைத்தியம் ஷை ஆகாரவகைகளைக் குறைத்துத் தாராள மாகக் கீரைவகை, மோர், பால் கூட்டிச் சாப்பிட்டுவர, கொழுப்பு புதிதாக உண்டாகாமலும், உள்ள கொழுப்புத் தேய்கிறதற்கும் இடமாகும். இவ்வுணவிற்கும் கொழுப்புக் கரைந்து குறையா விடின் (இதர நோயின் குறிகுணங்களும் இல்லாதிருந்தால்) புதுக் கொழுப்பு உண்டானதற்குக் காரணம் ஸ்ரோதஸ் அற்ற கிரந்தி களின் நோயால், அவற்றின் உட்சுரப்புச் சத்தின் பேதமே என் றறிந்துகொள்ள வேண்டும். இதற்கு ஷை உட்சுரப்புக் கிரந்திகட் கெல்லாம் தலைமைதாங்கும் தைரோயிட் (thyroid) சத்தில் ஆளின் வயதுக்கும் நோயின் குணத்துக்கும் தக்கவாறு உண்டுவந்தால், பழைய கொழுப்புச் சீக்கிரம் கரைவதுடன் புதுக்கொழுப்பு மேற் கொண்டு உண்டாகாமல் தேகமும் இறுகும்.

உஷ்ண தேசத்திலுள்ள நாங்கள், தாவர அல்லது பிராணி நெய்களையும், பலதினிசு இனிப்புப் பண்டங்களையும் ஏராளமாக உண்டுவிட்டு அப்பியாசமும் சிறிதுமில்லாமல் இருப்பதில் அதிக கொழுப்பு தேகத்தி லுண்டாகிறது. அது பெரும்பாலும் முன் னுக்கு அடிவயிற்றின் கீழும், இடுப்பைச் சுற்றிலும், பின்னுக்கு பிருஷ்ட பாகத்திலும், மேலுக்கு மார்பிலும் வளர்ந்துவரும். இத னால் தேகம் திரண்டு உருண்டு லக்ஷணமாகவோ, அவலக்ஷண மாகவோ காட்சியளிக்கும். இது 40 வயதுவரை – அவசியகருமம், நடை முதலிய சிறு அப்பியாசங்களால் கொழுப்பானது கொழுப் பமிலம், நீர் முதலியவைகளாகப் பிரிக்கப்பட்டு, உடம்பில் ஏற் படும் ரசாயன மாறுதல்களினால் எரிக்கப்பட்டு விடுகிறது. இப்படி நடைபெறும்வரை விக்கினமில்லை. ஆனால், வயதேற ஏற ஷை பிழையே தொடர்ந்து நடந்து வந்தால் கொழுப்பானது இரத் தாசயம், ஈரல் முதலிய இராச கருவிகளினுட் புகுந்துகொள்ள ஆரம்பித்து அவற்றின் இயக்கத் தொழிலுக்கு இடைஞ்சலாக இடர்புரிகின்றது, அதனால் சில சொற்பவேலை அல்லது அப்பியா சத்தாலேயே பலருக்குக் களையுண்டாகி மேல்மூச்செறிந்து வெகு நேரம் அப்பியாசம் செய்தவர்கள் மாதிரி இளைப்பார்கள். வெகு சிலருக்கு இதனால் இருதயமே தொழில்செய்யாதபடி சடுதியாக நிற்கவும்கூடும். இத்துடன் நீரிழிவும் சேருமேயானால் ஆயாசம்

# நமது நரம்புகளின் :: :: :: :: உற்பத்தி வரலாறு 4.

— வைத்தியர் ஆ. கனகரத்தினம் (கொழும்பு) —

★

நரம்புக்கிரமத்தின் இவ்விரு பெரிய தொகுதிகளின் செய்கைகள்தான் மனித வாழ்வின் அடிப்படைகளாக நின்று உதவிசெய்யும். நரம்பு மண்டலத்தின் இயற்கையால் மனம் தேகத்திலும் தேகம் மனத்திலும் தொழில் நடப்பிக்கும்.

உள்நோக்கும் தொகுதிகளினூடாக வரும் சலன உணர்ச்சிகள் ஒன்றோடொன்று அடர்ந்தும் ஐக்கியப்பட்டும் சேர்ந்து ஆற்றில் தண்ணீர் ஓடுவதுபோல நரம்பு வரிசைக்குள் சென்றுகொண்டிருக்கும். இவைகள்தான் உணர்ச்சி நரம்புகளை ஏற்படுத்துவனவாகும். அன்றியும், இவைகள் பழைய அனுபவ நுகர்ச்சிகளைக் கொண்டு மனிதர் நடத்தையை ஏற்படுத்தியும், ஞாபகத்திற்குரிய சிந்தையை உண்டுபண்ணியும் விடுகின்றன. வெளியேறும் சலனங்கள் (impulses) வெளிச்செல்லும் தொகுதிகளினூடாகச் சென்று ஒரு செய்கையை உண்டுபடுத்தியோ (அ) உண்டானதைத் தடுத்தோ விடுகின்றன. மனிதனின் நடத்தை உண்மையாகவே இவ்

---

மெத்த அதிகமாகும். இவர்கள் சிகிச்சைமுறையில் சாப்பாடு இல்லாமல் உபவாசமிருக்கும் நேரங்களில் கொழுப்பானது கொழுப்பமிலம் (fatty acids) ஆகப் பிரிந்து இரத்தோட்டத்திற் கலந்து மூளைக்குச் சென்று அறிவை மயக்கி தோஷத்தை (coma)க் கொண்டுவரக்கூடும். ஆனபடியால் இக் குணமுள்ளவர்கள் உபவாசம் இருக்கும்பொழுது பொரிகார நீரையோ க்ஷார (alkaline) உப்பு நீர்களையோ காலை மாலை உட்கொள்ளவேண்டும். சிலர் 'விஷிநீர்' அல்லது 'விஷிவில்லை'கள் (Vichy water or tablets) உட்கொள்வார்கள். வேறுசிலர் தோடம்பழச்சாறு உண்பார்கள். உடம்பில் ஏற்படும் இம்மாறுதல்களை விளங்குவோம்:- கொழுப்பின் பிரிவான கொழுப்பு அமிலங்கள் இரத்தோட்டத்தில் கலந்து க்ஷார உப்புகளை உண்டுவிடுவதால் புளிப்புத்தன்மை (acidosis) ஏற்படுகிறது. அவ்வித தோஷமடைந்த இரத்தம் உடம்பில் சுற்றி ஓடும்போது மூளை, இருதயம், ஈரல் ஆகிய இராஜ கருவிகளைத் தாக்குவதால் முறையே சந்நி (coma) மாரடைப்பு (heart failure) குடலுப்பிசம் (tympanites) ஏற்படக்கூடும். இந்த விஷிநீர், விஷிவில்லைகள், பொரிகாரநீர், தோடம்பழ ரசம் முதலியனவற்றின் உப்பு வகைகள் இரத்தத்துக்கு அதன் க்ஷாரத்தன்மை (alkalinity)யைத் திரும்பத் தந்து ஷ துட்ட குறி குணங்களைப் படிப்படியாக அகற்றி உடம்பைப் பாதுகாத்துக் கொடுப்பனவாம்.

○ ● ○

வெளிச்செல்லும் தொகுதிகளில் தான் தங்கியிருக்கின்றது. அது எவ்வளவுக்குப் பழைய அனுபவங்களை ஞாபகத்தில் இருத்தி வைத்திருக்கின்றதோ அவ்வளவிற்கு மனிதனின் செய்கைகள் சீரடைந்து ஒரு நோக்கத்தைக் கொண்டதாயிருக்கும்.

சராசரங்களின் இனம் ஏற ஏற எம்மால் கவனிக்கப்படுவதென்னவென்றால் அவற்றின் மேலான நடத்தையே. மூளைக்குள்ளும் தண்டு நரம்புக்குள்ளும் விசேஷ விருத்திகள் அடைந்திருப்பதே இம்மேலான நடத்தைக்குக் காரணமாகும்.

இதுவரை நரம்புத்தாதுவின் பொது இலட்சணத்தையும் பொதுவியல்பையும்பற்றி ஆராய்ந்தோம். இப்பொழுது அவற்றுள் பிரதானமானவற்றைச் சுருக்கிச் சொல்வாம்:-

ஒரு நரம்பணுவும் அதன் கிளைகளும் "நியூரோன்" (neurone எனப்படும். மறு தாதுக்களை ஏற்படுத்தும் சாதாரண அணுக்களிலும் பார்க்க நரம்பணுக்கள் மிகவும் நுட்பமும் விசித்திரமும் கொண்டதால் அதி விசேடமானதாகும். நரம்பணுவிற்குத் தன்னினத்தைத்தானே ஜெனனம் செய்துகொள்ள வல்லமையில்லை. இவ்வணுக்கள் ஒரு காம்பு - இரு காம்பு - பல காம்புள்ளவையாகக் (unipolar - bipolar - multipolar காணப்படும். இவை ஒவ்வொருவரினதும் தத்தந் தொகையிலும், ரூபத்திலும் அவற்றின் கிளைகள் கிளம்பும் பக்குவத்திலும் சில பேதங்களை உடையன.

எதிர்கோள் - rceptor - நரம்பணுக்களுக்கு ஒற்றை அல்லது இரட்டைக் காம்புகள் உண்டு. இணைப்பு - connector - இறுக்க - cffector - அணுக்களோ பல காம்புள்ளவை (multipolar) ஆகும்.

**எதிர்கோள் - receptor neurones:-** தரிசி ,- retina - நாற்ற நரம்பு கபசவ்விலும், 8-வது மூளை நரம்பின் அணுக்களிலும் - ganglia - உள்ளன. இவைகள் இரட்டைக் காம்பினையுடையனவாகும். ஏனைய சகல எதிர்கோள் அணுக்களும் ஒற்றைக் காம்பை உடையவையாகும். ஒற்றைக்காம்பும் - இரட்டைக் காம்பும் உள்ள அணுக்கட்கு இரு கவர்கள் - (processes - உண்டு. வெளிப்புற மத்திய கவர்கள் (peripheral and central) வெளிக் கவர், தாதுக்களில் முடிகின்ற அந்தந்த நரம்புகளினந்தங்களிலிருந்து வரும் நரம்புச் சலனங்களை அங்குள்ள, மறு நரம்பின் உணர்ச்சிக் கணுவின் - (sensory ganglion) - நரம்பணுவுக்கு மாற்றி விடுகின்றன. ஆனல் இவ்வித செய்கை விழிக்கும், நாசிக்கும் உரிய எதிர்க்கோள்களில் மாத்திரம் நடைபெறுது. மத்திய -central- கவரோ, அணுவிலிருந்து மூளைக்கு நரம்புச் சலனங்களை யனுப்பிவிடுகின்றது. மூளையை அடையமுன் இக் கவர்கள் 'உணர்ச்சி நரம்பு களென

அழைக்கப்படும். மேலும் இத்தும்புகட்கு ஒரு நரம்புப் போர்வையும் அளிக்கப்பட்டிருக்கும். மத்திய கவர்கள் உணர்ச்சித் தும்புகளைக் கடந்து மூளையினுட் செல்ல அவ்விடத்தில் அந் நரம்புப் போர்வை அற்றுவிடும். மூளையுட் சென்றதும் இந்த மத்திய தும்புகள் பிரிந்து பல கிளைகளைக் கொடுக்கும். இவைகள் ஆங்காங்கே குறுக்கும் மறுக்குமாய் ஓடிப்போகும்போது இணைப்பணுக்களைச் சந்தித்தால், அவ்வித சந்திப்பை - synap ses - நரம்புச் சந்திகள் எனப்படும். இதைப்பற்றிய விபரம் பின்வரும்.

**Connector neurones** இணைப்பணுக்கள்:- இணைப்பணுக்கள் பல காம்புகளை உடையன. ஆசய நரம்புத் தொகுதியோடு - autonomic system - சம்பந்தப்பட்டவையைவிட ஏனைய மூளை தண்டு நரம்புகளில் இவ்வணுக்களும்கவர்களும் சம்பந்தமுடையன. நரம்பணுவை நாடிச் சலனங்களைக் கொண்டு செல்லும் கவர்கள் -(dendrites)- சாதாரணமாகவே மிகக் கட்டையானவை. நரம்பணுவிற்குக் கிட்ட ஒழுங்கீனமாய் பல கிளைகளாய் பிரியும் தன்மையையும் உடையவை. நரம்பணுவிலிருந்து சலனங்களை வெளிக் கொண்டு செல்லும் காம்பு - axon - அணுவின் உடம்பிலிருந்து மல்லிகை மொட்டுக் காம்புபோல் வெளியாகும்; இக்காம்புகள் - axons; dendrites - டென்ட்றைற்சிலும் பார்க்க நீளமானவை. பின் அவை சிறு சிறு கிளைகளாய்ப் பிரியும். இவற்றிலிருந்து - c llaterals - என்னும் துணைக்கிளைகள் கிழம்பி மற்ற மற்ற நரம்பணுக்களைச் சாரலாம். இணைப்பணுக்கள் எதிர்கோள் அணுக்களிலிருந்து, இறுக்க அணுக்கட்குச் சலனங்களை யனுப்பும்: மூளை தண்டு நரம்புகளிலுள்ள அனேகமான சலனப் போக்குவரத்துத் தும்புப் பாதைகள்; இந்த இணைப்பு அணுக்களின் (axons) காம்புகளினுல்தான் ஏற்படுகின்றது.

**E'f ctor neurones** இறுக்க அணுக்கள்: இவ்வணுக்களும் இணைப்பணுக்களைப்போல பல காம்புடையன. இவ்வணுக்களில் ஏராளமானவை சேர்ந்துதான் மூளையினதும் தண்டினதும் நரம்புகளின் இயற்கை நரம்பின் மூலாதார வஸ்து ஏற்படுகின்றது. இவ்விறுக்க அணுக்களினது கவர்களும் அணு உடம்பும் சேர்ந்து இணைப்பணுக்களின் காம்புகளுடன் சந்திப்புகளை ஏற்படுத்துகின்றது. இப்படிச் செய்வதினுல் உணர்ச்சி நரம்பு மூலமார்க்கமாக நரம்புத் தொகுதியை அடையும் எதிர்கோள்களுடன் சம்பந்திக்கின்றது. இறுக்க அணுக் காம்புகள் மூளை தண்டு நரம்புத் தொகுதியை விட்டு அவற்றின் இயக்க - motor - நரம்புகள் மூலமாய் செல்கின்றன. நரம்பு மண்டலங்களில் இருக்கும்போது அவை "மயலீன்" (myelin) போர்வையால் மூடப்பட்டிருக்கும், மண்ட

# மேகசுரம்

— வைத்தியர் **V. K.** முருகேசபிள்ளை (கொழும்பு) —

★

மஹா மகத்துவம் பொருந்திய - பதினெண் சித்தர்கள், திருவாய் மலர்ந்தருளிய சுதேச வைத்திய கிரந்தங்களில் (சுரம் என்பது) அக்கினி மிகுதியினால் இரத்த தாதுவைக் கெடுத்துப் பலவகைப்பட்ட சுரங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பினும் (மேகசுரம் என்பது) ரணங்களின் விஷத்தால் ஏற்படுகின்றது. (அதாவது சுவாசக் குழாய், வயிறு, கணுக்கால், கணுக்கை, எலும்பு இவைகளை அனுசரித்துண்டாகும் ரணத்திற்கு அஸ்திசுரம் மேகசுரம் என்று சொல்லப்படும். மேகசுரம் எலும்பைப் பற்றிவிட்டது, கீல்களைப்பற்றிவிட்டது, சுவாசக்குழாயைப் பற்றிவிட்டது தீனிப்பையைப்பற்றிவிட்டது குடலைப் பற்றிவிட்டது மலக்குடலைப் பற்றிவிட்டது என்பன போன்றவற்றை அனுசரித்து, நம் சுதேச வைத்திய கிரந்தங்களில் க்ஷயரோகம் அல்லது க்ஷீண ரோகமெனக் கூறுவதுண்டு. இச்சுரமானது காலையில் குறைந்தும் மாலையில் உயர்ந்தும் இருப்பதை சுரம் பார்க்கும் அனல்மானி மூலமாய்க் காணலாம். இச்சுரத்தின் வேகத்திற்கேற்றவாறு வயிற்றில் வேதனை பல வர்ணங்கொண்ட மூத்திர எரிவு மேகவெட்டை இவைகளை உண்டாக்குவதும் அல்லாமல் குரல்வளையில் புண்ணுண்டாகி இருப்பின் ஆரம்பத்தில் இலேசான வறண்ட இருமல் காணப்படும். இருமும்போது சளியும் வெளிப்படுவதுமுண்டு. அஸ்தி மேகசுரம், உள்ளவர்களுக்கு இரவில் வேர்வை காணும். இன் நோயைக் கவனியாவிடில் நாளுக்கு நாள் நோய் அதிகரித்துப் படுக்கையில் கிடத்தி உடம்பின் கருவிகளைக் கெடுத்துவிடுவதுமல்லாமல் ஆகாரம் குறைவுபடும். இன்நோய் வாலிபர்களுக்கே அதிகம் உண்டாவதைக் காணலாம். இக்கொடிய நோயானது

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

லத்தை விட்டு வெளியாகும்போது நரம்புப் போர்வையினால் மூடப்பட்டிருக்கும். இறுக்க அணுக்களைப் பல தடவையும் கடைசிப் பொது இயக்கப் பாதை - (final common motor path - என்றழைப்பதுண்டு. ஏனெனில் இதனூடாகத்தான் நரம்புச் சலனங்கள் இறுக்க உறுப்புகளை யடைகின்றது. இறுக்க அணுக்களின் காம்புகள் எவ்வாறு முடிகின்றன வென்பது பற்றிய விபரம் பின்பு கூறப்படும்.

(தொடரும்)

## நன்கொடை உதவிய அபிமானிகட்கும் அன்பர்கட்கும் நன்றி.

★

நன்கொடை ரூபா 15 உதவியவர்:

S. விசுவலிங்கம், நியாயதுரந்தரர், நல்லூர்.

நன்கொடை ரூபா 10 உதவியவர்கள்:

T. இராசலிங்கம், 221, சீ ஸ்ரீற், கொழும்பு.

வைத்தியர் V. குமாரசாமி, பருத்தித்துறை.

## —: அனுதாபம் :—

●

கைதடி வடக்கு, கைதடி

வைத்தியர் சதாசிவம் இராமலிங்கம்

இளம் வயதில் சிவபதமடைந்ததையிட்டு

வைத்தியர்கள் அனைவரும் அவர் குடும்பத்தாருக்கும், பிள்ளைகட்கும் மனமார்ந்த துக்கத்தைத் தெரிவிக்கின்றோம். இறக்கும்பொழுது இவருக்கு வயது ஆக 33. தமிழ் வைத்தியத்திற்குப் பெரிதும் தொண்டாற்றியவர். இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

— வைத்திய சங்கத்தார்

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படுமானால் நீடித்துக்கொண்டே வரும். பதினாறு வயதிற்குமேல் நாற்பது வயதிற்குள் ஏற்படுமானால் அபாயம் நேரிடும். இப்போது நம் நாட்டில் நூற்றுக்கு அறுபதுபேர் இந்நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

இதைவிட நம் சுதேச வைத்தியமுறையில் நோயை ஆரம்பத்தில் கண்டறிவதுபோல் மேல்நாட்டுமுறைப்படி நோய் கணிக்கும் வகையில் நோய் ஆரம்பத்தில் (அல்லது) நோய் முற்றிவிட்ட நிலையில் சோதித்தறியச் சாத்தியமில்லை எனச் சொல்லலாம்.

எவ்வாறான பிணிகளையும் போக்கிச் சரீர ஆரோக்கியம் பெறுவதற்குச் சாதனமான சித்த ஆயுள்வேத சாரமாகிய வைத்தியமே பிரதான அங்கம் என்பது கூறாதே அமையும். (தொடரும்)

# இரத்தாசயம்

— வைத்தியர் ஐ. கந்தையா —

★

நமது நெஞ்சுக் கூட்டுக்குளிருக்கும் இரத்தாசயமானது நமது கைப்பிடியளவு பருமனுளதாய் அதன் அகன்ற அடிப்பாகம் மேல்நோக்கிப் பின்பக்கமாகச் சற்றுச் சாய்ந்தும், அதன் ஒடுங்கிய நுனிப்பாகம் கீழ்நோக்கி இடதுபக்கத்து ஐந்தாம் ஆறாம் விலாவெலும்புகளுக்கிடையில் முன்பக்கம் சற்று சரிந்துமிருக்கத்தக்க விதமாய் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு நாலு அறைகளுண்டு. இடதுபுற மேலறைக்குங் கீழறைக்குமிடையிலும், வலதுபுற மேலறைக்குங் கீழறைக்குமிடையிலும் (வால்வ்ஸ்) என்று சொல்லப்படும் கீழ்நோக்கித் திறக்குங் கதவுகளுமுண்டு. ஆனல், இடதுபுறத்து அறைகளுக்கும் வலதுபுறத்து அறைகளுக்கும் இடையில் அப்படிப்பட்ட திறப்புகள் கிடையா.

இடதுபுறத்துக் கீழறையிலிருந்து பிரகாசமான சிவந்த சுத்த இரத்தம் 'அயோர்ட்டா' என்று சொல்லப்படும் பெரிய குழாய்மூலமாகப் புறப்பட்டு, பின்பு பல கவர்களாகப்பிரிந்து ஆர்ட்டரிஸ் என்று சொல்லப்படும் சுத்த இரத்த நாடிகள்மூலம் சென்று, அதன்பின் காப்பில்லரிஸ் என்றழைக்கப்படும் மயிரிழை போன்ற நுண்ணிய நரம்புகள் மூலமாய்த் தேகமெங்கும் பாவி, தேகத்தைப் போஷித்து, தேகத்திலுள்ள அழுக்குகளை வாரிக்கொண்டு கார் இரத்தமாக மாறி, முதலாவது மயிரிழை போன்ற கெட்ட இரத்த நரம்புகளுக்குள் பிரவேசித்து, பிறகு வெயின்ஸ் என்று அழைக்கப்படும் சற்று பெரிய கெட்ட இரத்த நாளங்களுக்குள் பிரவேசித்து, கடைசியில் ஒரு பெரிய கெட்ட இரத்தக் குழாய் வழியாய் இருதயத்தின் வலதுபுற மேலறையில் பிரவேசிக்கும். இந்த கார் இரத்தம் கதவு மூலமாய், வலதுபுறக் கீழ்அறையில் உள்ள பல்மனரி ஆர்ட்டரி என்று சொல்லப்படும் நாளத்தின் மூலமாய் இரண்டு நுரையீரல்களுக்குள் பிரவேசித்து; அங்குள்ள சுத்த ஆகாயத்தால் சுத்திகரிக்கப்பட்டு, சுத்த இரத்தமாக மறுபடியும் மாறி, பல்மனரி வெயின்ஸ் என்றழைக்கப்படும் நாளங்களின் மூலமாய் இரத்தாசயத்தின் இடதுபுற மேலறையில் பிரவேசிக்கிறது.

(தொடரும்)

# கைகண்ட கைமுறைகள்

— வைத்தியர் க. வே. —

### அக்கரசுரத்திற்குக் குடிநீர்:

நற்சீரகம், கருஞ்சீரகம், திற்பலி, அதிமதுரம், சுக்கு, வல்லாரை இலை, வட்டுக்கத்தரிவேர், நன்னாரிவேர் இவை வகைக்குக் கழஞ்சு மூன்று சேர்த்து 1½ படி நீர் விட்டு ½ படியாக வற்றக் காய்ச்சி காலை மாலை இருவேளையும் ஒரு அவுன்ஸ்வீதம் கொடுத்து வரவும். இதில் கழிச்சல் மிகுதியாக இருந்தால் மூன்று கழஞ்சு அசமதாகம் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கவும். வயிறு கழிய வேண்டி இருந்தால் கடுக்காய் மூன்று கழஞ்சு சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கவும்; கழிச்சலும் சகல சுரமும் தீர்ந்து நல்ல சுகம் உண்டாகும். பாலருக்கு ½ அவுன்ஸ்வீதம் கொடுக்கவும்.

### செரியாமைக்கும், பல நஞ்சுகளுக்கும் மாற்றுமுறிவு:

செரியாமைக்கு பாவலிலைச் சாறு குடிக்கவும். செமிக்கும்.

பால்ச்சோறு செரியாமல் இருந்தால் மோர் குடிக்கவும்.

நெய் செமியாதிருந்தால் வென்னீர் குடிக்கவும்.

அவல் செமியாதிருந்தால் ஒட்டறையும் உப்பும் தின்னவும்.

மாம்பழத்திற்கு முறிவு தேங்காய்ப்பால் குடிக்கவும்.

செருக்கல் பாக்குத் தின்றால் நீற்றுப்பூசணிக்காய்ச் சாற்றில் இரண்டு கழஞ்சு கராம்பு பொடித்துப் போட்டுக் குடிக்கவும்.

இறைச்சி செமியாதிருந்தால் சாதிக்காய் தின்னவும்.

பன்றி இறைச்சி செமியாதிருந்தால் விளாவேர் அரைத்துக் கரைத்துக் குடிக்கக் கொடுக்கவும். (வேறு) கோரோசனையைக் கையாந்தகரைச் சாற்றில் கரைத்துக் குடிக்கக் கொடுக்கவும்.

தேனும் நெய்யும் குடித்துத் தொந்தித்தால் கரியை அரைத்து வென்னீரில் குடிக்கவும். (வேறு) கொள்ளு ஊறப் போட்டுக் குடிக்கவும்.

சுண்ணாம்பு தின்றால் மஞ்சள் தின்னவும்.

பச்சிலை நாவி தின்றால் கடுகு, நெல்லி, தாண்டி, சிறுகீரை வேர், மிளகு, சுக்கு அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும்.

காஞ்சூரங்கொட்டை தின்றால் வாழைப்பூச்சாறு குடிக்கவும்.

தில்லம்பாலுக்கு எள்ளு, சிறுகாஞ்சோன்றி வேர் இவை குடிநீராக்கிக் கருப்புக்கட்டி சேர்த்துக் கொடுக்கவும்.

### நஞ்சு பதினெட்டுக்கும் ஒத்தணம்:

மாவிலங்கம்இலை, வசம்பு, மிளகு, சிறுநீர் வார்த்தரைத்துப் பொட்டணங் கட்டித் தலைக்கு ஒத்தணங் கொடுக்கவும். சாறணை வேர், உள்ளி, வசம்பு இவை நறுக்கிப் பிழிந்து கண்ணில் விடவும். நஞ்சுமுறிவுக்குக் கைகண்டது.

*

# ஒரு கிறீம் செய்யும் முறை

★

கடையில் நல்ல புஷ்டி நிறைந்த கிறீம் கிடைக்கவில்லையென்றால் கீழே சொல்லியிருக்கிறபடி வீட்டிலேயே இந்தக் கிறீமைச் செய்துவைத்துக்கொள்ளலாம். இது மருந்துக்கடைகளில் - அதாவது டாக்டர் மருந்து எழுதிக் கொடுக்கும் சீட்டைப் பார்த்து மருந்து தயார்செய்து கொடுக்கிறார்களல்லவா? அந்தக் கடைகளில் - வாங்கலாம். இந்தக் கிறீமிற்கு விலை அதிகமாகாது. இவைகளின் பெயர்களைத் தமிழில் மாத்திரம் எழுதினால் கடைக்காரர்களுக்குப் புரியாதாகையால் ஆங்கிலத்திலும் தருகிறேன்:—

வைட் வாக்ஸ் — 1 அவுன்ஸ் (வெள்ளை மெழுகு)

லனோலயின் — 2 அவுன்ஸ் (சர்மத்திலுள்ள இயற்கை எண்ணெய்ப்பசை போன்ற செயற்கைப்பசை.)

ஆல்மண்ட் ஆயில் — 8 அவுன்ஸ் (வாதாமி எண்ணெய்)

[White Wax 1 oz; Lanoline 2 oz; Almond oil 8 oz.]

இவற்றைக் கொண்டு வந்ததும் குமுட்டியில் கரி போட்டுப் பற்றவிட்டு, அதில் ஒரு அகல பாத்திரத்தில் தண்ணீர் விட்டுக் கொதிக்கவைக்கவும். ஒரு கிண்ணத்தில் 'வைட் வாக்ஸ்' (வெள்ளை மெழுகு) போட்டு, கிண்ணத்தைக் கொதிக்கும் வெந்நீருக்குள் வைக்கவும். கிண்ணத்துக்குள் ஜலம் விழக்கூடாது. இந்த மெழுகு கிண்ணத்தின் வெளிச்சூட்டினால் உள்ளுக்குள் உருகிவிடும். அதில் மற்ற இரண்டு சாமான்கள் லனோலயின், ஆல்மண்ட் ஆயில் சேர்த்து நன்றாகத் தேக்கரண்டியினால் கலக்கவும். கிண்ணத்தை வெந்நீர் ஜலத்தைவிட்டு எடுத்து, குளிர்ந்த ஜலமுள்ள ஒரு பாத்திரத்தில் வையுங்கள். கிண்ணியின் சூடு தண்ணீருக்கு வந்தவுடன் அந்தச் சூடான ஜலத்தைக் கொட்டிவிட்டு மறுபடி குளிர்ந்த ஜலம் விடுங்கள். கிண்ணத்தை அதில் வைத்து, கிளறிக்கொண்டிருங்கள். அவை சற்று இறுகியவுடன் வாய் அகலமுள்ள ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொள்ளவும்.

இந்தக் கிறீமைத் தினம் தடவிக்கொள்ளுங்கள். சர்மத்திற்கு இது நல்லது. சாதாரண சர்மம் உடையவர்கள் அதிகமாகப் பசையில்லாத கிறீமைத் தடவலாம். ஆனால், அதிகமாகத் தடவாமல் நிதானமாகவே தடவவும். எண்ணெய்ப்பசை உள்ளவர்கள் கிறீமே தடவக்கூடாது. தடவினால் முகத்தில் அதிகம் எண்ணெய் வழியும். காலமல் லோஷனே அவர்களுக்குப் போதும். அடுத்தவாரம் பௌடரைப்பற்றிச் சொல்லுகிறேன்.

கடைகளில் கிடைப்பதைப் பாவிப்பவர்கள்
அதிலும் இதைப் பாவித்தல் நலம்.

— தினமணி

# காய்ச்சலின் வரலாறும் மருந்தும் II

★ வைத்தியர் நா. பெ. ★

**கிருமிரோக பத்தியம்:-** புடலங்காய், பாகற்காய், வேப்பம்பூ வடகம், சக்கரவர்த்திக் கீரை, ஈச்சங்குருத்து, முள்ளங்கி, பச்சைப் பயறு, துவரம்பருப்பு, கடுகு, அறுபதுநாள் பயிரான பழைய நெல்லு - சகலவிதமான உணவுகளையும் கிருமிரோகம் பிடித்தவர்கள் உட்கொள்ளவேண்டும்.

**கிருமி ரோகங்களுக்கு ஆகாத பதார்த்தம்:-** பால், இறைச்சிகள், வெல்லம், நெய், தயிர், கீரைவகை, கடலைவகை, புளி, தேன், தித்திப்புப் பண்டங்கள் முதலியன.

### பூச்சிக் கடியாலுண்டான சுர லக்ஷணம்:

கண்கள் கருநிறம், தேகம் வெண்ணிறம், வாந்தி, பிதற்றல், அதிசாரம், அருசி, மார்புநோய், சுரம் முதலியன.

**இதற்குக் குடிநீர்:-** ஓமம், வாய்விளங்கம், முள்முருக்கம்விதை, கொடிவேலிவேர், அமுக்கிரா, பெருமருந்தவேர், திப்பலி, மிளகு, சுக்கு இவைகள் சம எடையாய் எடுத்து இடித்து ஒருபடி நீர் விட்டு நாலிலொன்றாக்கி உட்கொள்ளவும்.

### விஷசுர லக்ஷணம்: (இது மலேரியா அல்ல)

பசி, அதிதாகம், பிரமை, அடிக்கடி சுரம் வருதல், குளிர்தல், மலமூத்திரம் வெளிப்படுதல், சரீரம் எரிச்சல், மூர்ச்சை, பிதற்றல், வாந்தி, மார்புநோய், ஆயாசம், மோகம், தினமும் முதல்நாள் அல்லது மூன்றாவது நான்காவது நாட்களிலாவது தாபத்துடன் சுரம் தோற்றல், முதல்நாளிலொருமுறை அல்லது பலமுறை குளிர்சுரம் வருதல் என்னுமிவையாம்.

**விஷசுரத்துக்குக் கிருதம்:-** சுக்கு, திப்பிலிமூலம், மிளகு, செவ்வியம், கொடிவேலிவேர், இந்துப்பு வகை ஒன்றிற்கு ஒரு பலம் எடுத்து இடித்துத் துணியில் அரித்துப் பசுப்பால் விட்டு அடுப்பேற்றிப் பின் நெய் அரைப்படி விட்டுப் பதமாய்க் காய்ச்சி வேண்டியபோது ஒரு கரண்டிவீதம் உட்கொள்ளத்தீரும்.

**சீத சுர லக்ஷணம்:** தேகத்தில் குளிர்ச்சி, நடுக்கல், தினவு, சோம்பல், பிரலாபித்தல், மூர்ச்சை, பிரமை என்பவையாம்.

**குடிநீர்:-** நிலவேம்பு, சிவதைவேர், திப்பிலி, வாய்விளங்கம், சுக்கு, கடுகுரோகணி, பற்படாகம், ஆடாதோடைவேர் இவை சம எடை எடுத்து இடித்து ஒருபடி நீர்விட்டு நாலிலொன்றாய் எடுத்து தேன் கலந்து உட்கொள்ளத் தீரும்.

புராதனமான தமிழ் வைத்தியத்தை ஆதரித்துப் புத்துயிர் பெறுக.

# வைத்திய வினுவிடை

— வைத்தியர் கா. ச. —

★

ஐயா வைத்தியர் அவர்களே!

என்னுடைய பிள்ளையொன்றுக்கு என்ன வருத்தம் என்று சொல்லமுடியவில்லை. பார்வைக்கு நோயாளி போல் தெரியவில்லை. நல்லாய்ச் சாப்பிடுகிறுன். அடிக்கடி கொல்லைக்குப் போகிறுன். வயது 4. வயிறு சற்றுப் பொருமல். வரவரத் தேய்ந்துகொண்டு வருகிறுன். பூச்சிக்குணமென்று ஆங்கில வைத்தியர்கள் சொன்னுர்கள். அதன்பிரகாரம் பூச்சி மருந்தும் கொடுபட்டது. பிள்ளை முன்போலத்தான். அதன்பிறகும் தேய்ந்துவருகிறுன்.

விடை:- இக்குணங்கள் அநேகமாகக் கணேச்சூட்டிற்குரியனவே. இக்கணேச்சூடு பல காரணங்களினுல் ஏற்படுகிறது. (1) தாய் கெர்ப்பவதியாய் இருக்கும்பொழுது நடந்துகொண்ட சில பிழைகளினுல் தேகம் சூடுண்டாகி கெர்ப்பப்பையைத் தாக்கியதனுலும், (2)பால்கொடுக்கும் காலங்களில் ஏற்படும் சில பிழைகளினுலும் பிள்ளைக்குக் கணேச்சூடு காணலாம். பொதுவாகக் கணேவியாதி பதினெட்டு எனப்படுகிறது. அவற்றுள் மேற்கூறியதும் ஒன்ருகும். பிள்ளையின் கைநாடி பார்த்து நோயை நிதானித்து உரிய மருந்தைக் கொடுத்தல் வேண்டுமாயினும் சகல கணேக்கும் பொதுவான ஒரு மருந்தைக் கீழே தருகின்ருேம். அதன்படி செய்க.

இவற்றிற்குப் பொதுவான தூளும் ஒரு குடிநீரும் கூறுவாம்.

தூள்:- செண்பகப்பூ, கோட்டம், கல்நார், கெருடபச்சை, செஞ்சந்தனம், சாத்திரவேதி, வசுவாசி, ஏலம், மதுரம், நற்சீரகம், சித்தரத்தை, கராம்பு, சாதிக்காய், மாயாக்காய், அசமதாகம், நெல்லிப்பருப்பு, சீனக்காரம், அக்கரு, கடுக்காய், உலுவா, மாதாளங்கோது இவையெல்லாம் கழஞ்சு ஒவ்வொன்று கூட்டிப் பொடிசெய்து இதில் அரைக்கழஞ்சுவீதம் பிள்ளைகள் பெலத்துக்குத் தக்கவாறு கீழ்க்காணும் அனுபானங்களிலிடவும்.

பருத்திப்பிஞ்சு அவித்துக் கொடுக்கலாம். ஆத்திப்பிஞ்சு அவித்துக் கொடுக்கலாம். நற்சீரகம் அவித்துக் கொடுக்கலாம். கராம்பு அவித்துக் கொடுக்கலாம். வெங்காயச் சாற்றில் கொடுக்கலாம். தயிரிலுங்கொடுக்கலாம்.

(மறுபக்கம் பார்க்க)

# மகோதரமும் அதன் சிகிச்சையும்

— வைத்தியர் அ. வி. இராசரத்தினம் —

★

இவ்ரோகம் பெரும்பான்மையும் தமிழில் பெருவயிறு என்று வழங்கப்படும். உதராக்கினி மந்தப்பட்டால் பொதுவாக எல்லா வியாதிகளும் தோன்றுவதற்குக் காரணமாகும். அவற்றிலும் விசேடமாய் உதரரோகங்களுக்கு அது காரணமாகின்றது. பொதுவாக நோக்குமிடத்து இயல்பாயுள்ள அக்கினி மந்தத்தினுலும், பதனழிந்த உணவுகளை உண்பதாலும், பழம் மலக்கட்டினுலும், அதினின்று அதிகரித்த வாதாதி தோஷங்கள் விசேடமாய் வயிற்றிலுள்ள வியர்வைக் குழாய்களையும், உமிழ்நீர், பித்தநீர், நிணநீர் முதலிய திரவப்பொருட்கள் ஓடும் குழாய்களையுமடைத்து பிராணவாயுவையும் அபானவாயுவையும் உதராக்கினியையும் அதிக விகாரமடையச்செய்து உதரரோகத்தை உண்டுபண்ணுகின்றன.

பசியின்மை, உண்டவுணவு அதிக நேரத்தின்பின் தாகத்தைக் கொடுத்து சீரணித்தல், இதனுல் சீரணமானதும் ஆகாததும் அறியமுடியாமை, அடிக்கடி பலங்குன்றுதல், அற்பவேலை செய்திடினும் பெருமூச்சு விடுதல், பழமலச் சேர்க்கையால் சிலவேளை பேதிகாணுதல், பாதங்களில் சிறு வீக்கமுண்டாதல், அடிவயிற்றுப் பொருத்துகளில் வலியுண்டாதல், வயிற்றில் இயல்பாயுள்ள மடிப்புகள் மறைந்துபோதல், அதன்மீது கொடிகொடியாக இரத்தக் குழாய்கள் பரவிக் காணுதல் ஆகிய இக்குணங்களைத் தமக்கு முற்குறியாகக் கொண்டிருக்கும். இம் மகோதரத்தை யூகி முனி முதலியவர்களிற் சிலர் முப்பத்திரண்டு வகையாகப் பிரித்துள்ளார்கள் இதனை வடமொழி நூலாசிரியருட் சிலர் உதரரோகமெனக் கூறி எட்டு வகையாகவும், வேறுசிலர் ஒன்பது வகையாகவும் பிரித்திருக்கின்றனர். எங்ஙனமெனில்:— வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்றுவிதமும், சன்னிபாதத்தினுலொன்றும், பிலீகமென்னும் மண்ணீரலின் வீக்கத்தினுலொன்றும், மலம் முதலிய கழிவுப்பொருட்கள் வெளிப்படமுடியாமல் கட்டிப்போவதால் பந்தோதரமென்னுமொன்றும், குடலில் ஏதேனுங் காரணத்தினுல் துவாரம் விழுவதால் சித்தோதரமென்னுமொன்றும், வயிற்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

குடிநீர்:- வில்வம் இலை, வட்டத்துத்தி இலை, வெங்காயம், வெந்தையம், நற்சீரகம், மாங்கொட்டைப் பித்து, நிலக்குமிழ் வேர் இவைகள் வகைக்குக் கழஞ்சு ஒன்று வீதம் எடுத்து வறுத்து நாலொன்றாகக் காய்ச்சிக் கறண்டி வீதம் தினம் நாலுவேளை கொடுக்க மேற்சொல்லிய ரோகமெல்லாம் குணமாகும். வேறு மருந்துகளுமுண்டு.

றில் நீரேற்றமுண்டாவதால் உதகோதரம் (சலோதரம்) என ஒன்றும் ஆகிய இவ்வெட்டை ஒருசாராரும்; வலப்பக்கத்திலுள்ள "யக்ருத்" என்னும் கல்லீரல் வீங்கித் தன்னிடத்தைவிட்டு, மற்றைய இடங்களில் அவ்வீக்கம் பரவுவதை யக்ருத்துதரம் எனக் கொண்டு ஒன்பதாகக் கூறுவாருமாயினர். இந்த யக்ருத்துதரத்தைத் தமிழில் கல்மாந்தம் அல்லது மாந்தக்கட்டியெனக் கூறுவர்,

இந்த ரோகத்தின் பொதுக்குறிகளாவன.-

வயிற்றுப் பொருமல், அபானவாயுவும் மலமும் குடலிற் சேர்ந்து அடைபடுதல், நடக்கமுடியாதிருத்தல், சடராக்கினி மந்தப்படுதல், உடலிளைத்தல், அழற்சிகாணுதல், திமிர்த்துப்போதல், வீங்கிய கை கால் வயிறு உடையவர்களாகவிருத்தல் ஆகியவை.

ஒவ்வொன்றின் தனித்தனிக் குணங்கள் வருமாறு:-

1. **வாத மகோதரம்:-** தேகம் வெளுத்து வற்றல், துர்ப்பலம், உணவு வெறுப்பு, வயிற்றூதல், முகத்தோற்றம் மாறல், புளித்தேப்பம், அடிவயிற்றில் வீக்கம், மனக்கிலேசம் உண்டாம்.

2. **பித்த மகோதரம்:-** உண்ட உணவு சீரணமின்றிப் பேதியாதல், தேக அழற்சி, வியர்வை, சுரம் தாகம், அதிசாரம், தோலிற் சுறசுறப்பு இவைகளுண்டாம்.

3. **சிலேற்பன மகோதரம்:-** தேகம் வெளுத்தல், அருவருப்பு உடல் நடுக்கம், குளிர், சுரம், அதிகசுவாசம். நித்திரையின்மை. கோபம். வயிற்றுப்பிசம். மலசலங் கழிவதில் கடுப்புக்காணல், இருமல், கோழை இவைகளுண்டாம்.

4. **வாத சிலேற்பன மகோதரம்:-** வயிற்றிலதிக இரைச்சல், பீசத்தில் வீக்கம், உடல் வெளுத்தல். வயிற்றிலுள்ள நரம்புகள் புடைத்தல். துர்க்கந்தமான வாய்வு பறிதல், வயிற்றிலதைப்பு ஆகிய குணங்களுண்டாம்.

5. **பித்த சிலேற்பன மகோதரம்:-** நாபி முதல் மார்பு வரையில் பிதுங்கலான வீக்கம் வயிற்றில் வாய்வு நிலைத்து நிற்றல், மலசலக் கட்டு. மார்பு நோதல். கைகால்களில் வீக்கமுண்டாம்.

6 **தொந்த மகோதரம்:-** தேகநிறம் மஞ்சணித்தல் வாதநாடி தீவிரமாய் நடத்தல், கண்கள் வெளுத்தல், உடம்பு வீங்கல், கை கால் சூம்பல், வயிறு விம்மல், தலைசுற்றல், தியக்கம் ஆகிய இக்குணங்களுண்டாம்.

7. **கல் மகோதரம்:-** மேல்வயிறு கல்லைப்போல் வீங்குதல், முகம் கறுத்தல், இருமல், இளைப்பு தேகம் மஞ்சள்நிறமாக வீங்

கல், உணவில் வெறுப்பு, வயிற்று நரம்புகளில் பசுமைநிறம் தோன்றல், மலசலக்குறைவு, முடிவில் தேகம் வெளுத்தல் ஆகிய குணங்கள் உண்டாம்

8. **வில் மகோதரம்:-** வயிறானது வில்லைப்போன்று முன் வீக்கங்கொண்டிருத்தல், மேல் வயிற்றில் வலி. விதைவீக்கம் அதிக தாகம், ஓயாதமயக்கம், மலசலக்குறைவு ஆகிய குணங்களுண்டாம்.

9. **வழலை மகோதரம்:-** மாமிசம் வளர்ந்து வயிறு பெருத்திட, நீர்கொண்டு தளதளத்தல் திமிர் தேகம் மரத்தல் பசியின்மை, படுக்கை கொள்ளாது வருந்தலுண்டாம்.

10. **நழலை மகோதரம்:-** அடிவயிற்றில் கட்டி காணும்; அதை அழுத்திப் பார்க்க நழுவும். மேல்வயிறெரியும்; பலவீனம் மேல் மூச்சு, நடைகொடாமை, தேகம் தளர்தல், நெஞ்சு வறண்டு புண் போலாதலுமுண்டாம்.

11. **நீராம்பல் மகோதரம்:-** அடிவயிறு கனத்துத் தடித்தல் கண்கள் வெளிறல், நாவறட்சி, இருமல் மூர்ச்சை மயக்கம், மலம் இளகிப்போதல், புறங்காலதைத்தல், கைகால்கள் மடக்கமுடியாதிருத்தல் முகம் வேறுபடுதலுமுண்டாம்.

12. **ஊறம்பல் மகோதரம்:-** மேல்வயிறு பொருமல், தலை கனத்தல், மயக்கம், தியக்கம், உறக்கம், முகம் வெளுத்தல், வியர்த்தல், தேகம் கனத்து வறண்டுபோதல் இவையுண்டாம்.

13. **வெப்புப்பாவை மகோதரம்:-** சரீரத்தில் வெப்பு மிகந்து வாய்வானது கீழ்த் தாக்குதலால் சரீரமெங்கும் கல்லைப்போன்று கடினமாக வீங்கிக் கனத்தல், கைப்பு புளிப்பு இவைகளில் வெறுப்பும், பின்னர் வயிற்றிலிருந்து வாய்வு மேலெழுந்து விலாப்பக்கங்களில் நிற்பதால் நாவிலுப்புச்சுவை தோன்றலுமுண்டாம்.

14. **குலைமுட்டி மகோதரம்:-** (குலை=ஈரல்) கீழ்வயிற்றிலுள்ள வீக்கம் மேல்நோக்கிச் சென்று இரண்டு குலைவரையும் பரவியிருக்கும். முகம் கை கால் இவைகளில் வீக்கம், பசியின்மை. மலம் வறண்டுபோதல், ஆசனம் சுருங்கி நெருங்கிக்கொள்ளுதல், தேகம் கறுத்தல், மேல்மூச்சு, குரற்கம்மல் இவையுண்டாம்.

15. **கீழ்க்கவிசை மகோதரம்:-** அடிவயிற்றில் தட்டையாகக் கட்டியுண்டாகி வயிற்றைப் பொருமச் செய்யும். மேல்வயிற்றில் வில்லைப்போல் வளைவாய் இசிவு உண்டாகும்; சந்துகளிற் குடையும்; மனஞ் சலிக்கும்; அடிக்கடி பெருமூச்சு விடும்; வாய் பிதற்றும்; மலசலம் சுருங்கலாகிய இக்குணங்களுண்டாம். (தொடரும்)

---

தனிவைத்தியம்:

# தொண்டைக் கிரந்தி (tonsil), நாசிக்கிரந்தி (adenoids) களின் வீக்கமும் மருந்தும். I

★

**எ**ண்சாண் உடம்புக்கும் பிரதானமான சிரசில் கண்டத்துக்கு மேற்பட்டுக் காணப்படும் தொண்டை நோய்களில் தொண்டைக் கிரந்தி, நாசிக்கிரந்திகளில் வரும் வீக்கம் முக்கியமானதாகும். ஏனெனில், இது அநேகமாக இயற்கைச் சுயகாப்புக் குறைந்த சிறு வரையும், சனநெருக்கடி, எளிய வாழ்க்கை, தூசிக்காற்று முதலிய வைகளால் சுகாதாரநிலை குன்றிய அனைவரையும், தாக்கி; சிரசி லுள்ள கண், காது, பல் முதலிய அண்மை உறுப்புகளுக்கும்; மூச் சுப்பை, சிறுகுடல், இருதயம், ஈரல் முதலிய சேய்மை உறுப்பு களுக்கும் பரவித் தீங்கை விளைவிப்பதாகும். தொண்டையிலுள்ள உறுப்புகளில் இக்கிரந்திகளே முக்கியமானவையாகக் கருதப்படு கின்றன. மேல்நாசியுள் பின்புறம் இருக்கும் *நாசிக்கிரந்தியும், பக் கத்துக்கு ஒன்றாக 'துவாரபாலகர்'போல் தொண்டைத் துவாரத் தைக் காவல்புரியும் தொண்டைக் கிரந்திகளும், வாயாலோ மூக் காலோ உட்செல்லும் உணவுபானதிகளில் மறைந்திருக்கும் கிருமி களை, இரைக்குழாய் மூச்சுக்குழாய்களுக்குள்ளும், கண்டக் கிரந்தி களுக்குள்ளும் புகாமல் தடுத்து அழிக்கின்றன.

தொண்டைக்கிரந்தி, நாசிக்கிரந்தி இவைகள் வீக்கத்தின் கார ணம் குறிகுணம் பின் விளைவுகளை அறிவோம்.

**காரணம்:-** சூடு, குளிர் உற்பாதங்களால் சிலேற்பனம், வாதம் அல்லது இரண்டும் தோஷமடைந்து இது உண்டாகும். இது 5—9 வயதுள்ள சிறுவருக்கே அதிகமாகக் காணுவதுண்டு. கை விரல், விளையாட்டுப் பொருட்களைச் சூப்புதல், எச்சில் கிண்ணம் முதலியவற்றில் அருந்தல், முருங்கைக்காய்த் தும்பு, பல்பிறஷ் தும்பு, சிறுமீன் முள்ளு முதலியன குத்துதல், 'ஐஸ்கிறீம்' முத லிய கடுங்குளிர் அல்லது கடுஞ்சூடான ஆவி பிடித்தல், அசுத்த நீர், காற்று உட்செல்லல் முதலியனவாம்.

**குறிகுணம்:-** I. மூக்கால் மூச்சுவிடுவது கஷ்டமானதால் (1)உண வை மெல்லாமல் விழுங்கல் அல்லது வெகு மெல்லவாக உண்ணு தல்; (2) நித்திரை பிடிக்காமல் படுக்கையில் புரளல் அல்லது குறட்டைவிடல்; (3) திறந்தவாய், மிதந்த முன்பல், உயர்ந்த அண் ணம், நீண்ட முகம், கவிந்த நாசி, சப்பை நெஞ்சு, மூடநோக்கு, மந்தபுத்தி முதலியனவும்;

---

* இதற்கு adenoids என்பதைவிட pharyngeal tonsil என் றும் பெயருண்டு.

II. கிருமிகள் (1) உணவு பானங்களோடு குடலுள் செல்வதால் (*a*) ஈரல் கட்டு (liver abscess) (*b*) குடல்வால் கட்டு (appendicitis) முதலியனவும்; (2) காற்ருேடு மூச்சுப் பைக்குள் செல்வதால் நெஞ்சுத்தடுமலும் (bronchitis) (3) இரத்தோட்டத்திற் பரவுவதால் (i) சென்ற இடமெல்லாம் நோயும் நோவும் (ii) இருதயத்துக்குச் சென்று இருதய தாபிதமும் (endo & pericarditis), (iii) கால் கைகளில் இறங்கி (*a*) கில்வாதம் (*b*) தசைவாதமும்; (4) நரம்புகளைப் பற்றுவதால் திடுக்காட்டம், இராமூத்திரம், கொன்னைப் பேச்சு முதலியனவும்;

III. தோற்றுநீர் அயலுறப்புகட்த ஊர்ந்து திரிவதால் (1) காது தாக்கப்பட்டு காதுநோய், சீழ்க்காது, காதுச்செவிடும்; (2) கண் தாக்கப்பட்டு வெள்விழியில் pblycton) பூவிழலும், இமைமயிர் உதிர்தலும்; (3) பற்கள் தாக்கப்பட்டு சொத்தைப் பல்லும்; (4) மூச்சுக்குழாய் தாக்கப்பட்டுக் கிரந்தித் தொய்வும் காணப்படும்.

பின் விளைவு:- இது கொல்லும் நோயல்ல. வீக்கம் மூச்சும், உடற்போஷணையும் உட்செல்லும் பாதைகளை ஆளுவதால் உபத்திரவத்தாலும் ஆபத்தாலும் திகிலடையச் செய்யும். கவலையீனமாக இருந்தால் உயிரிழக்கவும் அல்லது உயிர்வாழும் பரியந்தம் துன்பப்படவும் நேரிடும். மருந்தால் அநேகமாக சுகமாகி விடுகிறது.

**தொண்டைக் கிரந்தியின் கட்டு:-** உடம்பின் தத்துவம் கெட்டு பெலன் குன்றியிருக்கும் வேளைகளில், கிருமி நஞ்சும் குணத்தாலும் கனத்தாலும் கூடிவிட்டால் இதற்கும் இரத்தத்தின் வெண்சிவக்கிரந்தி அணுக்களுக்கும் நடக்கும் போராட்டத்தினுல் தொ. கிரந்தி ஒன்றில் (சிலவேளை இரண்டிலும்) வீக்கம் ஏற்படுகிறது. அப்பொழுதே அதன் குறிகுணங்களான தொண்டைநோ, குரற்கம்மல், வாய்நாற்றம், தேகச்சூடு, முதலியன காணும். நோய் இன்னும் அதிகரித்தால் தலைவலி, காய்ச்சல், பிடரிநோவும் (கண்டக் கிரந்திகளின் பகுதியான) கீழ்த்தாடை மூலக் கிரந்திகள் வீங்குவதால், அவ்வுட்புறத்தில் அதைப்பும், விழுங்குவதில் நோவும் கஷ்டமும், நாக்கில் அழுக்குப் படிவும் தொ. கிரந்திகளில் வெண்மஞ்சளான சிதல் பொட்டுகளும் அல்லது ஆடைபோன்று கழலும் சவ்வும் இருக்கும். இந்தச் சமயத்தில் சிகிச்சை தொடங்கி விட்டால் ஷெ குணங்கள் படிப்படியாகக் குறைந்து 2, 3 தினங்களில் சுகம் காணும். சிகிச்சை புரியாவிடின் தொ. கிரந்தி உள்ளுக்குச் சீழ் கொண்டு விம்மிச் சிவந்து அதன் இருப்பிடச் சூழலான அண்ணப் பகுதிகளையும், அண்ணுக்கையும் சிவந்து அதைக்கச் செய்வதால், தொண்டைத் துவாரம் மிகவுஞ் சிறுத்து ஒன்றும் விழுங்கமுடியாமலும், மேல்நாசிப் பின் துவாரம் ஒடுங்கி மூச்சுக் கஷ்டமும் ஏற்படும். இந்நிலைமை நீடித்தால் மூச்சுத் திணறலுண்டாகித் தாஞ

# கெற்பனி இருமலுக்கு உறட்டி

— வைத்தியர் வே. சின்னத்துரை —
(கோலாலம்பூர்)

★

முள்முருக்கந்துளிர், இயங்கந்துளிர், தூதுவளைஇலை, கொடிப்பாலைத்துளிர் இவை வகைக்கு ஒரு கைப்பிடி எடுத்துக் காற்படி புளுங்கலரிசி நனையவைத்து இலைகளோடு சேர்த்திடித்து உறட்டியாய்த் தட்டிப் பசுநெய் பூசிச் சுட்டுத் தேனில் தோய்த்து மூன்றுநாள் இருநேரமும் சாப்பிட எப்பேர்ப்பட்ட கெற்பணி இருமலும் நீங்கும். அப்போதைக்கப்போது புதிது புதிதாகச் சேர்க்கவும். மூன்றுநாளும் வாய்வுப் பதார்த்தமும், மாமிசமும் விலக்கவும்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

கவே சீழ்க்கட்டி உடைக்கும். உடையாவிட்டால் உடனே சத்திர சிகிச்சை செய்து சிதலை வெளியாக்காது போனால் அபாயகரமானதாகும். சீழ் வெளிவந்தவுடன் ஷை குணங்கள் அதிசயிக்கக்கூடிய சீக்கிரமாகக் குறைந்துவிடும். இது தீவிரமுறையான தொ. கி. வீக்கமாகும். இது தனிய வருவது தவிர தொண்டைக்கரப்பன்* diphtheria), கொப்புளிப்பான் (measles), கடும் தடுமல் முதலிய நோய்களிலும் வருகின்றது.

**நாட்பட்ட தொண்டைக் கிரந்தி வீக்கம் (chronic tonsillitis):-** இது மெள்ள மெள்ள இலேசாகத் தொடங்கி சிகிச்சை புரியாததால் குறையாமல் கடினப்பட்டு, பூச்சு மருந்து முதலியவற்றிற்கும் சீக்கிரம் கரையாமல் தொல்லை கொடுக்கும். இப்படி நாட்பட்ட வீக்கத்தில்தான் ஷை குறிகுணங்கள் அநேகமாக உண்டாவதும், மேற்கூறிய வியாதிகள் காண்பதும் சகஜமாகும்.

தொண்டைக்கிரந்தி நாசிக்கிரந்தி வீக்கத்தின் சிகிச்சையை அடுத்த இதழில் ஆராய்வோம்.

---

* இதில் சவ்வு மஞ்சளாயிராமல் சாம்பல் நிறமாயிருக்கும்; அருகிலுள்ள மெது அண்ணத்திலும் அண்ணாக்கிலும் பரவியிருக்கும். தொ. கி. மேற்பரப்பு கிருமிகளால் தாக்கப்பட்டு அழிகிறபடியால் சவ்வு எடுபடாது. வில்லங்கமாக உரித்தால் இரத்தம் வரும். கீழ்த்தாடை மூலத்தில் நெறியும் மூக்கால் தங்கைபாகச் சளியும், (சிலவேளை இரத்தமும்) வருவதுடன் பிடரி விறைப்பும், 102° வரை காய்ச்சலும், மந்தநாடியும், மிகு அசதியும் இதற்குவிசேஷ குறிகளாம்.

---

"ஞேட்டுப் புழுதியும் மாட்டுச் சாணியும்
தோட்ட மண்ணும் ஈட்டும் ஈர்ப்பையே"

'ஈர்ப்பு' என்பது 'ஏற்புவலி' என வழங்குவதையே.

# புற்றுரோக சிகிச்சை

— வைத்தியர் வி. கனகசபை —

★

இந்நோய்களுக்கு முன்னுள்ள மேல்நாட்டு மருத்துவர் பெரும்பாலும் சத்திர சிகிச்சைகளையே ஆரம்பத்திற் கையாண்டு வந்திருக்கிறார்கள். நம் சுதேச மருத்துவர்கள் சத்திர சாராக்கினிப் பிரயோகத்துடன் இந்நோய்களுக்குரிய காரணங்களைத் தடுப்பதற்கேற்ற உள்மருந்துகளையும் கையாண்டு வருகிறார்கள். தற்காலமுள்ள மேல்நாட்டு வைத்தியர்கள் இந்நோய்க்கு மின்சார சிகிச்சையையே சிறப்பெனக் கண்டு அதனையே பெரும்பாலும் கையாண்டு வருகின்றனர். ஆயினும் இச்சிகிச்சையாற் பயனடையாது பலர் இறந்தும் போகிறார்கள்.

நமது தமிழ் மருத்துவர்கள் இந்நோய்க்குப் பண்டுதொட்டுக் கையாண்டுவந்த அரிய உள்மருந்துகளையும் அவற்றிற்கேற்ற சாராக்கினித் தைலம் முதலிய சில அனுபோக முறைகளையும் இதன்கீழ்க் கூறுகின்றோம்.

## உள்மருந்துகள்:

1. இரச வல்லாதி மேழுகு:- வாலைரசம், கெந்தகம், சுத்திசெய்து குமிழ் நீக்கிய சேங்கொட்டை - வகை பலம் 1; சிற்றாமணக்கெண்ணெய் பலம் 2.

செய்முறை:- முதலில் சேங்கொட்டையை ஒன்றிரண்டாக நருக்கிச் சிற்றாமணக்கெண்ணெயிற் போட்டு அக்கொட்டைகள் மிதக்கும்வரைகாய்ச்சி இறக்கியாறியபின் எண்ணெயைப் பீங்கான் பாத்திரத்தில் வடித்துப் பத்திரப்படுத்தவும். பின்னர் கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்து வாலைரசத்துடன் கலந்து அரைத்து உறவானபின், முன் சித்தப்படுத்தியுள்ள சேங்கொட்டைத் தைலத்தைத் துளிதுளியாக விட்டு 3 மணிநேரம் மெழுகு பதம்வர அரைத்து அதனை 1முத்தின சிறுதேங்காயின் கண்ணைத் திறந்து சலத்தைப்போக்கி உட்செலுத்தி வேப்பங்கட்டையால் வாயை அடைத்துச் சம கனமாகச் சுமார் ஒரு அங்குல அளவுக்குச் சாணத்தை அப்பிக் காயவைத்து அதன்மேல் இரண்டு சீலை மண் செய்து காய்ந்தபின் 10 அல்லது 15 வராட்டியில் புடமிடுக. தேங்காயின் ஓடு வெடித்து வாசனைவரும் சமயம் அதனையெடுத்து ஓட்டை நீக்கி தேங்காயையும் உள்ளிருக்கும் மருந்தையும் கல்லுரலில் இட்டுப் பூணில்லாக் கனத்த உலக்கையால் நன்கு மசியும்படி இடித்து மருந்தினைச் சேதப்படாமல் எடுத்து அம்மியிலிட்டு மெழுகுபதமாகும்வரை நாலைந்து தினம் அரைத்துப் பீங்கானில் பத்திரப்படுத்துக.

உபயோகம்:- இம்மெழுகில் நோயின் வன்மை மென்மைக்கேற்பக் காலை மாலை 5 முதல் 10 நாள் உட்கொள்ளக் கொடுக்கவும்.

தீரும் வியாதிகள்:- பல புற்று நோய்களும், கண்டமாலை, திமிர், குட்டம், தடிப்பு, சூலை, கிரந்தி, அரையாப்பு, கருமேகம், ஊறல், படை, பவுந்தரம், தடிப்பு, குளிவிழும் புண் முதலிய நோய்களும் நீங்கும்.

பத்தியம்:- உப்பு, புளி, காரம், புகையிலை, மீன், இறைச்சி இவைகள் கண்டிப்பாய் நீக்கவேண்டியது. பால், நெய் சேர்க்கவும்.

2 இரச கெந்தி மெழுகு:- சுத்திசெய்த இரசம், செந்தகம், பறங்கிக் கிழங்கு, சேங்கொட்டை வகைக்குப் பலம் 1; பூரம், தாளகம், காந்தம், துருசு, துத்தம், மிருதாரசிங்கி, சுக்கு, ஓமம், மஞ்சள், திப்பிலி, சிற்றரத்தை, கோட்டம் வாலுளுவை அரிசி, சோம்பு, ஏலம், சாதிக்காய், மிளகு, சீரகம், கார்போக அரிசி, மாசிக்காய், தெசாவரம், வாய்விளங்கம், வசம்பு, கராம்பு, கடுக்காய், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், சிறுதேக்கு தாளிசபத்திரி, பிரப்பங்கிளங்கு, எட்டிவித்து, தேற்றுவித்து, நீர்முள்ளிவித்து, எள்ளு, கொள்ளு, தேங்காய்க் கொப்பரு, சின்னிவேர், சங்கம்வேர், அமுக்கிரா்ய்க்கிளங்கு, கொல்லன் கோவைக் கிளங்கு, கொடிவேலிவேர், முந்திரி வகைக்கு வராகனிடை 1; கோழிமுட்டைக்கரு 2; பனைவெல்லம் பலம் 9.

செய்முறை:- முதலில் கெந்தகத்தைக் கல்வத்தில் போட்டு அரைத்துப் பொடிசெய்து அத்துடன் இரசத்தைச் சேர்த்து நன்றாய்க் கறுப்பாகும்வரை அரைத்துப் பின்னர் பூரம், தாளகம், காந்தம், துருசு, துத்தம், மிருதாரசிங்கி இவைகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்தரைத்து எல்லாம் உறவானபின், மற்றச் சரக்கினங்களை இடித்துச் சீலையில் அரித்து நுண்ணிதாக எடுத்த சூரணத்தை சுத்தி முறைப்படி தயாரித்த சேங்கொட்டையுடன் சேர்த்து பூணில்லா உலக்கையால் சுமார் 4 மணிநேரம் கல்லுரலில் மசிய இடித்துச் சேங்கொட்டையிலுள்ள பால் சூரணத்துடன் நன்கு உறவானபின் அதனை எடுத்துச் சேங்கொட்டையின் கட்டைகளை நீக்கி முன்சித்தப்படுத்திய இரசம் முதலிய வைரச்சரக்குப் பொடியோடு கலந்தரைத்து எடுத்து மீண்டும் கல்லுரலிலிட்டு இவற்றுடன் பனைவெல்லத்தையும் முட்டைக்கருவையும் சேர்த்து முன்போல் பூணில்லா உலக்கையால் சுமார் 3 தினங்களுக்குக் குறையாமல் புரட்டிப் புரட்டி இடித்து எல்லாச் சரக்குகளும் உறவாகும்படி செய்தல்வேண்டும். பின் இதனை எடுத்து ஒருசாடியில் சேர்த்துச் சாடியின் வாயை மூடிப் பூமியில் புதைத்து இரண்டு மாசம் சென்றபின் உபயோகிக்கவும்.

பிரயோகம் :- வேளைக்குத் தேற்றுங்கொட்டைப் பிரமாணம் தினம் இருநேரம் சுமார் 20 நாளைக்குக் குறையாமல் சாப்பிடவும்.

பத்தியம்:- புளி, புகையிலை, போகம் இவற்றை நீக்கிப் பத்தியம் கொள்ளவும். அத்துடன் மோரும் சேர்த்துக் கொள்ளவும்.

தீரும் வியாதிகள்:- புற்று ரோகத்தோடு குட்டம், கண்டமாலை, திமிர், தவளைச் சொறி, மேகசூலை, கிரந்தி, அரையாப்பு, கரும் புள்ளி, மேகவூறல், படர்தாமரை, குளிவிரணம், பவுந்தரம், தொடைவாளை, அழுகண்ணி முதலிய நோய்கள் தீரும்.

3 கெந்த காதி மெழுகு:- சுத்திசெய்த கெந்தகம் 20; இரசம் 12; வீரம் 12; பூரம் 12; பூநீறு 12; சுத்தமான தேன் 20. இவைகள் யாவும் களஞ்சு வீதம் எடுத்துக் கொள்ளவும்.

செய்முறை:- கெந்தகத்தை ஒரு இரும்புச் சட்டியிலிட்டு கரி நெருப்பில்வைத்து உருக்கித் தைலம்போல் வருஞ்சமயம் தேனைச் சிறுகச்சிறுகவிட்டு அயக்கரண்டியினால் கிளறி அதில் இரசம் முதலிய மற்றச் சரக்குகளை நுண்ணிதாகப் பொடிசெய்து சிறிதுசிறிதாகத் தூவி ஓயாமற் கிளறிக்கொடுத்துப் பொங்கினால் ஆற வைத்து மறுபடியும் எரித்துக் கிளறிக்கொடுத்து மெழுகுபதம் வருஞ்சமயம் இறக்கி ஆற்றி வாயகண்ட பீங்கான் பாத்திரத்தி லிட்டு மேல்மூடி 3 மாசம் கைபடாமல் வைத்துவிடுக.

பிரயோகம்:- தினம் இருவேளை நேரமொன்றுக்குக் குன்று மணிப்பிரமாணம் மருந்தைப் பனைவெல்லத்தின் மத்தியில் வைத்துப் பொதிந்து புளுங்கலரிசித் தவிட்டில் புரட்டி 3 நாள் கொடுக்கவும். அவசியமிருப்பின் பின் 7 நாள் கழித்து முன்போல் 3 நாள் கொடுக்கவும். இதனால் புற்றுரோகமன்றி பட்சவாதம், குட்டம் மேகவிரணம், சொறி படை, தேமல் கிரந்தி, கொறுக்கு சூலை, அண்டவாதம், அண்டசூலை, குன்மம் முதலிய வியாதிகள் நீங்கும்.

பத்தியம்:- புளி, உப்பு நீக்கிப் பசுப்பால், நெய் சேர்த்து இச்சா பத்தியமாக இருப்பதுடன் பச்சைப்பயறு, முளைக்கீரை, துவரம் பருப்புக் கூட்டிக் கொள்ளவும். நெல்லாவி, நல்லெண்ணெய், தாளிதவாடை, பெண்போகம், கரப்பான் பதார்த்தங்கள் ஒரு மாதம்வரை கூடாது. 7-வது நாள் தலைக்குத் தண்ணீர் வார்த்து 9-வதுநாள் பாலோடு மிளகு சேர்த்தரைத்துத் தலையிற் றேய்த்து முழுகிப் 11-வதுநாள் வாத தேகமானால் ஆமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய், பசுநெய் இவை மூன்றையும் சமனிடை கலந்து தலையிற்றேய்த்து முழுகச்செய்யவும். பித்த, சிலேற்றும, தொந்த தேகிகளானால் ஆமணக்கெண்ணெய் தேய்த்து முழுகலாம். அரப்பு, சீயாக்காய் அல்லது பச்சைப்பயறு தேய்த்துக்கொள்ளவும்.

4. **வாலே ரச மேழுகு:-** வாலேரசம், பறங்சிக்கிழங்கு, பூவரசம் வேர்ப்பட்டை, இயங்கம்வேர்ப்பட்டை, கஸ்தூரி மஞ்சள் வகை பலம் 1.

**செய்முறை:-** வாலேரசம் நீங்கலாக மற்றவைகளை இடித்துச் சூரணஞ்செய்து வாலேரசத்தையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு போதுமான தேன்விட்டுப் பதினெருநாள் அரைத்து வழித்துப் பச்சை மூங்கில் குழாயில் போட்டு வாயில் ஆப்பிட்டு அடைத்துப் பூமியில் புதைத்து 3 மாசம் சென்றபின் எடுத்துக்கொள்ளவும்

**பிரயோகம்:-** நேரம் குன்றியெடைவீதம் பனைவெல்லத்தில் வைத்து நாளொன்றிற்கிருமுறை 7 நாள் கொடுக்கவும். தேவையாயின் 10 நாள் கழித்து மறுமுறை கொடுக்கவும்.

**தீரும் வியாதிகள்:-** புற்று மேகம், கைகால் பிடிப்பு, தடிப்பு, உளைவு, குத்தல் குடைச்சல் ஆறாதரணம், படை, சொறி, சிரங்கு, புழுவெட்டு, பிளவை, புரையோடும் ரணம், கருமேகம், வெண்குட்டம் இந்நோய்களாலுண்டாகும் மறுக்கள், கிரந்தி முதலியன தீரும்.

**பத்தியம்:-** மருந்துண்ணும் காலம்வரை புளி, புகை, போகம் நீக்கவும். (தொடரும்)


**லெக்ஷ்மி விலாஸ்**
**சைவாள் காப்பி ஹோட்டல்**

★ நவீன மிட்டாய்கள்
உயர்ந்த பலகாரங்கள் ★

சுத்தம்-சுகாதாரம்-தூய்மை எங்கள் உணவில் காண்க.

சுத்தமான நெய்யில் எங்கள் பட்சணங்கள்
சுவைகனிந்து இன்பந்தரும்.
எஸென்ஸ் காப்பி—மல்லிக் காப்பி—தேனீர்
மற்றும் பலவித பானங்களைப் பருகி
—ஆனந்தியுங்கள்.—

**தில்லைவனம்பிள்ளை — காப்பி ஹோட்டல்**
205, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.

# வைத்தியச் செய்திகள்

## "காலரா" தடை ஊசியால் மரணமாம்!

சென்ற மாதம் இந்தியாவிலிருந்து விமானமூலம் இலங்கையில் இறங்கிய பெண்மாணவி ஒருவருக்கு "குவாரண்டைன்" சட்டப்பிரகாரம் 'காலரா' தடை ஊசி மருந்து ஏற்றியபின்பு மூன்றுவது நாள் அப்பிரயாணி மரணமடைந்துவிட்டதாக அறியப்படுகிறது.

## அ. இ. சி. ஆ. வை. சங்க காரியக்கமிட்டிக் கூட்டம்:

ஷை காரியக் கமிட்டிக் கூட்டம் 1-10-50ல் யாழ்ப்பாணம் பெருமாள்கோவிலடி சன்மார்க்க போதன வித்தியாசாலை மண்டபத்தில் தலைவர் **K. S.** பரிபூரணநந்தர் அவர்கள் தலைமையில் கூடியது. அனேக அங்கத்தவர்கள் சமுகமளித்தனர். முதலில் சென்ற கூட்ட அறிக்கை வாசித்து நிறைவேறியது.

இரண்டாவதாக, பரந்தனில் ஸ்தாபிக்கவிருக்கும் மூலிகைத் தோட்டத்துக்கு ஏற்ற நிலத்தைத் தெரிந்தெடுக்க 2-ம் தடவையும் அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஓர் உபகமிட்டி நியமிக்கப்பட்டது. அதில் உள்ளவர்கள்:- வைத்தியர்கள்: S. A. இராசையா, K. வேலாயுதபிள்ளை, A. S. இராசையா, V. வீரசிங்கம், V. குமாரசாமி, K. S. பரிபூரணநந்தர், V. கனகசபை. மேற்படி உபகமிட்டியாரை அடுத்த வாரமே பரந்தன் நிலத்தைத் தெரிவு செய்யும்படி காரியக் கமிட்டி கேட்டுக்கொண்டது. [ஷை கமிட்டி கடந்த புதன்கிழமை (4-10-50இல்) பரந்தன் சென்று முரஸ்மொட்டை என்ற இடத்தில் 24 ஏக்கர் மட்டும் நல்லதென்று தீர்மானித்துத் தெரிந்தும், வேறு இடங்களையும் பார்வையிட்டு ஏற்றதாகக் கண்டுகொண்டும் திரும்பியது.]

மூன்றுவதாக, சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று 22-10-50 இல் கூட்டவேண்டுமென்றும், அச்சமயம் "வைத்தியர்கள் பதிவுக் கமிட்டியார் பிரதான பட்டணங்களுக்கு விஜயம்செய்தே வைத்தியர்களைப் பரிசோதித்தல் வேண்டுமென்றும், அபின் விநியோகத்திலிருக்கும் சீர்கேட்டை உடனே தீர்க்கவேண்டுமென்றும், மேற்படி சங்கத்தின் ஆலோசனையின்படி இலவச வைத்தியசாலைகளுக்குப் பணம் கொடுபடல்வேண்டுமென்றும்" அரசாங்கத்தைக் கேட்கும் தீர்மானங்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

நான்காவதாக, சங்கப் பிரமாணப்படி கிரமமாக மூன்று காரியக் கமிட்டி கூட்டங்களுக்கு சமுகமளிக்காத எட்டு அங்கத்தவரின் காலியான இடங்களுக்கு அங்கத்தவர்களை அடுத்த கூட்டத்தில் தெரிவுசெய்யப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

# மரண அனுதாபம்

**I.** பருத்தித்துறையைச்சேர்ந்த பிரபலவைத்தியர் திரு. P. K. இராமலிங்கம் அவர்கள் தமது 75-ம் வயதில் (11-7-50) நீரிழிவு ரோகத்தால் பீடிக்கப்பட்டுக் காலகதியானார். வைத்திய சங்கங்களில் சேர்ந்து மிகவும் தொண்டாற்றிய இப்பெரியாரது ஆன்மா சாந்தியடைய அ. இ. சி. ஆ. வைத்திய சங்கக் கமிட்டியில் மௌனம் அனுட்டிக்கப்பட்டது. அவரது குடும்பத்தாருக்கு எமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**II.**

பருத்தித்துறையைச்
சேர்ந்த 'மருத்துவமணி'
ஸ்ரீமான்
ச. கிருஷ்ணபிள்ளை
அவர்கள்
சென்ற 27-4-1950ல்
காலகதியானார்.
அவரின் குடும்பத்தாருக்கு
எமது சங்கம்
தனது அநுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கிறது.



## அபின் தட்டுப்பாடு நீங்கும்! கஞ்சா பாவிக்க உத்தரவு!

கம்பஹா ஆயுள்வேத வைத்திய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சென்ற 4-10-50ல் நடைபெற்றது. அச்சமயம் பேசிய சுகாதார மந்திரி S. W. R. D பண்டாரநாயக்கா அவர்கள் சுதேச வைத்தியத்தை அபிவிருத்தி செய்வதில் தான் எப்பொழுதும் ஊக்கமுடையவரென்றும், குறைந்தது ஒன்று அல்லது இரண்டு

சுதேச வைத்திய வார்ட்டுகளாவது தற்போதிருக்கும் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சேர்க்கத் தான் விரும்பியதாகவும், ஆனல் நிர்வாகம் செய்வதில் ஏற்படும் இடையூறுகள் காரணமாக அவ்விதம் செய்யமுடியாதிருப்பதாகவும், காலகதியில் சுதேச வைத்திய ஆஸ்பத்திரிகள் ஸ்தாபிக்கப்படும் என்றும் கூறினர். மேலும் தற்போது அபினுக்கு இருக்கும் தட்டுப்பாட்டை நீக்க இந்திய அரசாங்கத்துடன் ஓர் ஒழுங்கு செய்திருப்பதாகவும்; கஞ்சா உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றை எப்படிச் செய்வது என்பதை ஆலோசித்து வருவதாகவும், வைத்திய சங்கங்களிலிருந்து ஏற்ற ஆலோசனைகள் அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டார். கூட்டத்தில், கஞ்சாவை அரசாங்கமே உற்பத்திசெய்து விநியோகித்தல் வேண்டுமென ஓர் தீர்மானம் நிறைவேறியது.

## தாம்பிரப் பாத்திரமும் காலரா நோயும்

கிண்டி "கிங்" ஸ்தாபன கிருமி ஆராய்ச்சிச்சாலையில் இருக்கும் ஆராய்ச்சியாளராகிய ஸ்ரீ டி. என். எஸ் ராகவாச்சாரியார் இந்திய விஞ்ஞான ஆலோசனைச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் வெளியிட்ட அறிக்கையில் நன்றாக புளி, சாம்பல் போட்டுப் பளபளப்பாகத் துலக்கிய உட்பரப்புடைய தாம்பிரக் குடத்தில் ஏரி, குளங்கள், கிணறுகள், நதிகளிலுள்ள தெளிவான சலத்தை $1\frac{1}{2}$ மணிநேரம் சேமித்து வைத்தால் அந்நீரிலுள்ள விஷக் கிருமிகள் இறந்துபோய் அந்நீர் பரிசுத்தமாவதுமட்டு மல்லாமல், காலரா எனும் வாந்திபேதியை உற்பத்தி செய்யும் கிருமிகளையும், மலேரியாக் கிருமிகளையும் அழிக்கும் தன்மையுடையதென்பதைப் பரீக்ஷார்த்தபூர்வமாக வெளியிட்டார்.

கல்கத்தாவில் போஸ், சக்கரவர்த்தி எனும் இரு வைத்திய ஆராய்ச்சியாளர் தாம் ஆராய்ந்தறிந்த ஓர் உண்மையை வெளியிட்டிருக்கிறார்கள்:-

காலரா நோயை உண்டாக்கவல்ல அணுக்கிருமிகள் நிரம்பிய கூழை, வடிகட்டின தண்ணீர் அடங்கிய ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் வார்த்து, அதனுள் ஒரு மெல்லிய தாம்பிரத் தகட்டைத் தொங்கவிட்டனர். $\frac{1}{2}$ மணிநேரங் கழிந்தபின் அந்நீரைச் சோதித்ததில் அதிலுள்ள கிருமிகள் நாசமாகிவிட்டதைக் கண்டனர். தாம்பிரத் தகடு தொங்கவிடாத மற்றொரு கண்ணாடிப் பாத்திரத்தின் கூழ்கலந்த நீரில் ஷெ கிருமிகள் உயிருடன் அதிகரித்து வளர்ந்திருந்தனவாம். அடுத்தபடி குளத்து ஜலத்தை, மேற்கண்ட சோதனையைப் போலவே ஒரு சோதனைக்குள்ளாக்கியதில் கிருமிகள் $1\frac{1}{2}$ மணி நேரத்தில் இறந்தனவாம். தாம்பிரத்தகடு இல்லாத குளத்து ஜலத்தில் அக்கிருமிகள் 15நாட்கள் உயிருடன் இருந்தனவாம். கண்

ஞுடிப் பாத்திரத்திலுள்ள ஜலத்தில் தாம்பிரத் தகட்டை 2 மணி நேரந்தொங்கவிட்டு எடுத்தபின் அந்நீரில் சேர்க்கப்பட்ட காலராக் கிருமிகள் $\frac{1}{2}$ மணிநேரத்துக்குப் பிறகு தென்படவில்லை. 4 மணி நேரம் தாம்பிரத்தகடு தொங்கவிடப்பட்டிருந்த நீரில் $\frac{1}{4}$மணிநேரத் திலேயே அவை மரித்தனவாம்.

இவையன்றியும் அன்னவாது ஆராய்ச்சிகளில் மோர், பெருங் காயம் இரண்டும் காலராக் கிருமிகளைக் கொல்ல வல்லவை என் றும் சோதனைகள் மூலம் வெளியாயிற்றும். (தாம்பிரம்=செம்பு)

## கொழும்பின் 1-வது சுதேச வைத்தியசாலை

அக்டோபர் 6-ம் திகதி இலவசமாகச் சிகிச்சையளிக்கக்கூடிய சுதேச வைத்தியசாலை யொன்றைக் கொழும்பு மேயர் டாக்டர் குமாரன் ரத்னம், வனத்தமுல்லையில் திறந்துவைத்தார். கொழும்பு முனிசிப்பல் சபை எல்லைக்குள் இவ்வித வைத்தியசாலையொன்று திறக்கப்படுவது இதுதான் முதல்தடவை. ஆயுள்வேத டாக்டர்கள் எல். அமரதாசா, டபிள்யூ. ஏச். எஸ் குணவர்த்தன ஆகியவர்க ளின் பொறுப்பில் மேற்படி வைத்தியசாலை விடப்பட்டிருக்கிறது.


# செ. சிவக்கொழுந்து & சன்

மருந்துச்சரக்கு வியாபாரம்

52, பெரியகடை, : : யாழ்ப்பாணம்.

ஸ்தாபிதம் :- 1923

மருந்துச் சரக்கு வியாபாரத்தில் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்கள்.

எங்களிடம் சிறந்த ரகமானதும் புதிதானதுமான எல்லாவித மருந்துச் சரக்குகளும், கோரோசனை கஸ்தூரி, குங்குமப்பூ, புனுகு, பச்சைக்கற்பூரம், முதலியவைகளும், அபிஷேகதிரவியங்களும்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# மயில் மார்க்

# நெல்லிக்காய்த் தைலம்

★

இத் தைலத்தை
வாரம் இருமுறை தேய்த்து ஸ்நானம் செய்துவர
பீநிசம், தும்மல், நாசி வரட்சி, மூக்கடைப்பு,
தலைவலி, பித்தநீர் சிரசில் தங்குவதாலுண்டாகும்.
ஒருதலைக் கபாலம், பித்தக் கிறுகிறுப்பு, கண்குத்து,
கண்வலி முதலிய சகல நயன ரோகங்களும் நீங்கி
சிரசுக்கும் கண்களுக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.
நல்ல ஞாபகசக்தியை உண்டாக்கும்.

சாஸ்திர ரீதியாக
அரிய மூலிவகைகளைக் கொண்டு
தயாரிக்கப்பட்டது.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

---

**நாஷனல் பெர்பியூமரி கம்பெனி,**
திருமங்கலம்
(தென் இந்தியா)